# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

இதழ்-04 01 ஆகஸ்ட் 2012



பேய்க்கு யாரையெல்லாம் பிடிக்கும் தெரியுமா?

20/-

பெற்றோர்களே உஷார்!

மருத்துவம் தொடர்பான கேள்வி-பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாதநிலா**

இதழாசிரியர்
**திருமதி.அனிதா விஜய்**

நிர்வாக இயக்குனர்
**எஸ்.விஜய்**

கனினி வடிவமைப்பு,
அச்சுப் பதிப்பு, வெளியீடு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
**172, மில் வீதி, வவுனியா.**
**024 222 5799   077 900 9491**

வெகு விரைவில்...

**உங்களோடு ஒரு சில நிமிடம்!**

## ஆசிரியர் நேரம்

எங்கள் மேன்மைமிகு வாசகர்களே!

மீண்டும் ஒருமுறை இவ்வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். எமது கடந்த மூன்று நிலா மூலமாகவும் எங்களுக்கு நீங்கள் தந்த ஒத்துழைப்புக்களுக்கும் வரவேற்புகளுக்கும் எங்கள் கோடி நன்றிகள். வவுனியாவில் இருந்து பலவிடயங்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்து கொண்டிருக்கும் எமது இச்சஞ்சிகையில் நீங்கள் வைத்திருக்கும் எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கையும் வீண்போகாவண்ணம் எமது படைப்புக்கள் அமைந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எமது சஞ்சிகையில் உங்களுடைய எண்ணங் களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக புதிதாக "ஹலோ டொக்டர்" என்ற பகுதியை உங்களுக்கு வழங்குகின்றோம். இதன் மூலம் உங்கள் மருத்துவ சம்மந்தமான அனைத்து கேள்விகளையும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரிவிலும் சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர்கள் பதிலலிப்பார்கள். இப்பகுதியூடாக எமது மக்கள் தகுந்த பலனை பெறுவார்கள் என நம்புகின்றேன்.

தேடல், உழைப்பு, இலட்சியவெறி, நோக்கம், இலக்கு, குறிக்கோள், முயற்சி இவையனைத்திற்கும் உந்துதலாக இச் சஞ்சிகை விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இச்சஞ்சிகையானது உங்கள் மனங்களில் நிறைவான இடத்தைப்பிடிக்கும் என்பது உறுதி.

பல சிந்தனைக்கு களம் அமைத்து தரும் எமது சஞ்சிகைக்கு உங்களுடைய ஆதரவுகளே இன்னும் பல நற்செய்திகளுக்கு வலுச்சேர்க்கும். நீங்கள் எப்போதுமே இச்சஞ்சிகைக்கு உறுதுணையாக இருங்கள் அப்போதுதான் எமது சஞ்சிகை பலவகையான சிறப்பான அம்சங்களை அள்ளிவழங்கும்.

மேலும், எமது மாணவசெல்வங்களுக்காக தொகுக்கப்பட்ட "வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்" என்ற பகுதியில் ஏராளமான போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றார்கள். ஆனால் அவற்றுள் சில ஆக்கங்களை போட்டியில் சேர்த்துக்கொள்ள முடியாமல் இருப்பதையிட்டு மனம்வருந்துகின்றேன். காரணம் வகுப்பாசிரியரின் கையொப்பம் இடப்படாமல். இருப்பதால் அவை போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இவற்றை சற்று கவனத்தில்கொள்ளுமாறு உங்களை கேட்டுநிற்கின்றேன்.

–ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களும் கையடக்க தொலைபேசியும்

தகவல் தொடர்பு சாதனங்கள் என்பது கருத்தை அல்லது தகவலினை ஓரிடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவிகள் எனக்குறிப்பிடலாம். ஆரம்ப காலங்களில் இருந்தது போல ஒருவருடனான பேச்சு சம்பாசனை கூட்டங்கூடல் போன்ற வழிமுறைகளினாலான தொடர்பாடல்கள் இன்று அருகி விட்டது.


அத் தொடர்பாடலினை கருவிகளின் வழி நாம் மேற்கொள்கின்ற போது அவை தொடர்பு சாதனங்களாகி விடுகின்றன. அத்தோடு இத் தொடர்புசாதனங்களின் வழி பெறப்படும் தகவல் பரிமாற்றமானது எத்தகைய தடங்கலும் இன்றி ஒருவரை சென்றடைகின்ற போது தான் அவை சமூகத்தில் பயனளிக்கின்றன. அல்லது முழுமை பெறுகின்றன. இத்தகவல் தொடர்பு சாதனங்களில் தொலைபேசி, இணையம் முக்கியத்துவம் பெறுகின்றன.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் தகவல் பரிமாற்றம் திகழ்கின்றது. இத் தொடர்பாடல் சாதாரண கண்ஜாடை முதல் இணையத்தில் தொடர்பு கொள்வது வரை எந்தவகையிலும் அமையலாம் அதேபோல் பரிமாறிக்கொள்ளப்படுகின்ற தகவல் இப்படித்தான் அமைய வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. தகவல். எவ்வகையிலும் ஒழுங்காக சென்றடைந்தால் அது தகவல் பரிமாற்றாக கொள்ளப்படும்.

இத் தகவல் பரிமாற்றம் இல்லையேல் மனிதன் பூரணத்துவமான ஒரு மனிதனாக வாழமுடியாது மனிதன் ஒரு சமூகப்பிராணி எனும் நிலையில் சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்படாமல் அவனால் வாழ முடியாது. மொழி பழக்கவழக்கங்கள் ஒழுக்க முறைகள் கருவிகளின் பயன்பாடு ஆகிய அனைத்தையும் அவன் சமூகத்தில் இருந்து பெற்றுக்கொள்கின்றான். இதனால் ஒருவனது நடத்தையில் பலவாறாக செல்வாக்குச் செலுத்தும் தன்மையினை நாம் நோக்கமுடியும்.

கையடக்க தொலைபேசி நமது சமூகத்தில் எங்கும் நிறைந்திருக்கின்றது. அவைகளுக்கு தடைகள் இல்லை. இன்று பெருகி வரும் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் நினைத்தவுடன் அதே கணத்தில் அழைப்புக்களை மேற்கொள்ளவும் குறுந்தகவல்கள் (SMS) அனுப்பவும் பெறவும் முடிகின்றது. மேலும் விம்பங்களாகவும் ஒளி ஒலி முறைகளிலும் தகவல்களை வெளிக்கொணர்ந்து தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது.

இவை இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிந்தனையின் மையப்புள்ளியாக விளங்குகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பண்பாடு, விழுமியம் நெறிமுறைகள் கலாசார அம்சங்கள் உணவு பழக்க வழக்கங்கள் உறவு முறைகள் என அனைத்து அம்சங்களிலும் பாரிய தாக்கத்தினை செலுத்துவதாக அமைகின்றது.



இன்று பாடசாலை மாணவர்கள் தாமாகவே விரும்பியோ விரும்பாமலோ இக் கையடக்கத்தொலைபேசியின் ஆட்சிக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு நேரத்தினை கடமைகளை மறந்து செயற்படுகின்ற அளவுக்கு வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இன்று விமர்சிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களின் நேரம் வீண் விரயம் செய்யப்படுவதுடன் கற்றலின் பெறுமதி தேவையின் இலக்கின் முக்கியத்துவம் குறைக்கப்படுகின்றது. இவர்களிடையே சமூக அக்கறை பற்றிய சிந்தனைகள் இல்லாது போவதுடன் தமது பொறுப்புக்கள் கடமைகள் எதிர்கால திட்டங்கள் பற்றி சிந்திக்கும் தன்மை முதலானவை கையடக்கத் தொலைபேசி பாவனையால் குறைந்துள்ளது.

அறிமுகமானவர்கள் உறவினர்கள் நண்பர்களுடன் உரையாடுவது போதாதென்று முகம் தெரியாதவர்களுடன் கூட தொடர்பு வைத்திருப்பதால் தவறான பாதையை தேர்ந்தெடுக்கவும் கலாசார பண்பாடு சீர்கேடுகள் ஏற்படவும் உறவுகளுக்கு இடையில் புறக்கணிப்புக்கள் உளப்பாதிப்புக்கள் என்பனவும் ஏற்படுகின்றது. மேலும் வன்முறை மனப்பாங்குகளும் வளர்கின்றன.


குற்றச்செயல்களும் இதனால் அதிகரிக்கின்றது. அதாவது கையடக்கத் தொலைபேசியை வைத்திருப்பது கௌரவமாக இவர்கள் மத்தியில் காணப்படுவதால் அதனை திருடுவதற்கும் இவர்கள் பின்நிற்பதில்லை. மேலும் கையடக்கத் தொலைபேசி கணக்கை மீள்நிரப்பச் செய்ய வீட்டில் பணம் கொடுக்காத சந்தர்ப்பத்தில் வீட்டிலேயே திருடுகின்ற தன்மையும் இவர்களிடம் அதிகரிப்பதனால் பல சிறிய குற்றங்களை இலகுவாக செய்ய கற்றுக்கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்குறிப்பிட்ட வகையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசி அவர்களது வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதனை அறியமுடிகின்றது. இன்றைய நிலையில் கையடக்கத் தொலைபேசி பாவனை உலகளாவிய ரீதியில் பரந்துபட்டவிடயமாக காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பாதுகாப்பு கருதி அவர்களுக்கு பெற்றோர்களால் அளிக்கப்படும் கையடக்கத் தொலைபேசியே அவர்களை பல சமூகபிரச்சினைகளை எதிர்நோக்க வழி வகுக்கின்றது.

ஏனைய Video clips MP3 Songs Games என பல தரப்பட்ட விடயங்களால் கவரப்பட்ட மாணவர்கள் மணிக்கணக்காக தங்கள் பெரும் பொழுதை இதில் கழிக்கின்றனர். தேவைக்கென பாவிக்கும் நிலை போய் எந்த நேரமும் கையில் அதை வைத்துக் கொண்டு நேரத்தையும், மன ஆரோக்கியத்தையும் பெருமளவில் பாதிக்கின்றது. மேலும் அண்மைக்காலத்தில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கையடக்கத்தொலைபேசிகளில் குரல் மாற்றி (Voice Changer) பேசும் வசதி காணப்படுவதால் பல பிறழ்வு நடத்தைகள் ஏற்படுகின்றன.



இதனால் இதனை தவிர்க்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் வழிகாட்ட வேண்டும் கண்டிப்பதன் மூலம் எந்தவொரு செயலையும் நாம் தடுத்து விட முடியாது. நல்ல புத்தகங்களை வாசிக்கவும், பெற்றோர், உறவினர்களுடன் நட்புறவாக வளர்வதற்கு எல்லாமே இந்த வழிகாட்டல் அவசியம். இன்று உலகம் முழுவதுமே கையடக்கத் தொலைபேசிகளில் பாடசாலை மாணவ சமூகத்தை தம் கைப்பிடிக்குள் வைத்துள்ளது.

எனவே அதற்கு அடிமையாகி விடாது திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் கல்வியிலும் ஆளுமை விருத்தியில் நல்ல முன்றேனற்றத்தை எட்ட முடியும் பாடசாலை நேரங்களில் மாணவர்கள் இதனை பாவிப்பது இனங்காணப்பட்டு இலங்கையில் அனேக பாடசாலைகளில் இதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாட நேரங்களில் ஆசிரியர்களும் கையடக்கத் தொலைபேசியை பாவிப்பதனை தவிர்ப்பதன்மூலமாக அவர்களுக்கு முன்னோடியாக திகழலாம். மேலும் பாடசாலையை விட்டு திரும்பியவுடன் நண்பர்களுடன் அரட்டை அடிக்க கையடக்க தொலைபேசியை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடுகின்றனர்.

இவர்கள் இதனை தவிர்த்துக் கொள்ளல் நன்று. ஏனெனில் பாடசாலையிலும், தனியார் வகுப்புகளிலும் அவர்களுடன் பேசிவிட்டுத் தான் வீடு திரும்பியிருப்பார்கள் எனவே வீட்டுக்கு வந்ததும் மீண்டும் பாடங்களை படிக்கலாம் அல்லது ஓவியம் , நடனம், விளையாட்டுக்களில் கவனத்தை செலுத்துவதன் மூலம் ஆளுமையை விருத்தியடையச் செய்யலாம்.

பொதுவாகவே கையடக்கதொலைபேசி தகவல் தொடர்பு சாதனங்களுள் மக்கள் மத்தில் முக்கியமானதொரு சாதனமாக மாறியுள்ளது. இது சமூகத்தில் பகுதியளவில் வேலையை இலகுவாக்குதல், தொடர்பாடலை இலகுவாக்குதல் போன்ற சாதகங்களுக்காக பயன்படுத்தினாலும் இது பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமூக நலனை மேம்படுத்தாமல் மாறாக பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது..

தகவல் தொடர்புகள் பயன்படுத்த வேண்டியது இன்று பல்வேறு குற்றச் செயல்களுக்கும் ஒழுக்க சீர்கேடுகளுக்கும் துணை போகின்றது. இதன் பாவனையை பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்த நிலையில் நாகரீகம் என்ற போர்வையில் கலாசாரத்தினை சீரழிக்கும் தன்மையைக் கொண்டு காணப்படுகின்றனது. இவ்வாறாக பாடசாலை மாணவர்கள் அன்றாட வாழ்வியலில் அம்சங்களில் மிகுந்த பாதிப்பினை பிறழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இது சமூகத்தில் பல சமூக பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது என்பதையும் இதன் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. கடந்த காலங்களில் இதன் தேவை குறைவாகவே காணப்பட்ட போதும் இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் அத்தியாவசிய பொருளாக மாறிவிட்ட நிலையில் அதனால் விளைவுகள் ஆழமானதாகவே அமைகின்றன. இதனை கவனத்தில் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி, எதிர்கால நலன் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டும்.

என்பதுடன் இவ் கையடக்கத் தொலைபேசி மூலமாக தேவையற்ற பாவனையை குறைப்பதனையும், அந்நிலையை மாற்றுவதற்காக அதாவது அதற்கு அடிமையாகும் தன்மையை மாற்றும் வழிவகைகளை விழிப்புணர்வில் ஏற்படுத்தி தம் பிள்ளைகளை நேரான பாதைக்கு இட்டுச் செல்வது அவசியமாகும்.

பாடசாலை மாணவர்களின் ஆளுமை விருத்தியில் அதிக அக்கறையும் மாவண சமூகத்திற்கு செழிப்பான கல்விவளம் எதிர்காலம் சிறப்பான முறையில் அமைவதற்கும் இக் கையடக்கத் தொலைபேசி தாக்கத்தில் இருந்து விடுபட சகலரும் சிந்திப்பதும் கடமை உணர்வுடன் செயற்படவேண்டிய அவசியமாகும்.

## குட்டி ஜோக்!

**மனைவி:** என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க?

**கணவர்:** டாக்டர் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக்பண்ண சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகக் கண்காட்சி-2012

**இடம்: வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்**
**காலம்: 2012 யூலை 1,2,3**

**வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவகத்தால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் இணைந்து கொண்டு பங்குபற்றிய நிறுவனங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**
**வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி**
**வவுனியா முறைசாராப் பிரிவு**

**நோக்கம்:**
மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்த்தல்
புத்தாக்க சிந்தனைகளை வெளிக்கொணர்தல்
மாணவர்களை வேல உலகிற்கு தயார்படுத்தல்
பொதுப்பரீட்சையில் மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிக்க வைத்தல்

**இடங்கள்**
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மடு, வவுனியா வடக்கு, யாழ்ப்பாணம் போன்ற பாடசாலையில் வர்த்தகபிரிவு கற்கும் மாணவர்கள் அனேகமானவர்கள் கலந்து கொண்டனர்.

**பங்குபற்றிய நிறுவனங்கள்:**
மத்திய வங்கியின் யாழ் பிராந்திய அலுவலகம் உட்பட
வவுனியாவின் வணிக வங்கிகள்
காப்புறுதி நிறுவனங்கள்
நிதிக் கம்பனிகள்
தொலைத் தொடர்பு நிறுவனம்(SLT)
தபால் நிலையம்
கணினி நிறுவனங்கள்
இவற்றுடன் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த 22 பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றினர்



வடமாகான கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறையின் செயலாளர் **திரு.எஸ்.சத்தியசீலன்** அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றுகின்றார்

**2012 உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இந்தக் கண்காட்சியின் மூலம் பணம், வங்கி, காப்புறுதி, தொடர்பாடல், போக்குவரத்து போன்ற விடயங்களில் வருகின்ற வினாக்களிற்கு விடையளிக்க கூடியதாக இருக்கும் என கூறியிருக்கின்றார்கள்.**

1ம் நாள் பிரதம விருந்தினர்
**MM.முகைதீன்**
வடமாகாண கௌரவ ஆளுநரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர்

2ம் நாள் பிரதம விருந்தினர்
**எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி மகான கல்வித் திணைக்களம் வடமாகானம்

3ம் நாள் பிரதம விருந்தினர்
**S.சத்தியசீலன்**
வடமாகான கல்வி பண்பாட்டு விளையாட்டு • துறை அமைச்சின் செயலாளர்



கௌரவ வடமாகான ஆளுனரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் **திரு.எம்.எம்.முகைதீன்** அவர்களை வரவேற்பதை படத்தில் காணலாம்



வ/பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம், வ/பூவரசங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் இணைந்து சவர்க்கார உற்பத்தி செய்முறைகளை விபரிக்கின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் முன்னிலையில் செய்யக்கூடாத சில....

குழந்தைகள் நல்ல விதமாய் வளர்ப்பது பெற்றோர் கையில் தான் உள்ளது. குழந்தைகள் முன்னிலையில் செய்யக்கூடாத, சொல்லக்கூடாத சிலவற்றைத் தவிர்த்தால், அவர்கள் நல்ல பிள்ளைகளாக வளர்வது நிச்சயம். குழந்தைகள் முன்னிலையில் செய்யக்கூடாதது என்னென்ன?

கணவன்-மனைவி சண்டை சச்சரவு குழந்தைகளுக்குத் தெரியக்கூடாது அவர்கள் முன்னிலையில், சண்டையிட்டுக் கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

குழந்தைகள் முன்னிலையில், பிறரைப் பற்றி தேவையில்லாமல் விமர்சிக்காதீர்கள். உதாரணமாக "உங்கள் பிரண்ட் மகா கஞ்சனாக இருக்கின்றாரே" என்று நீங்கள் உங்கள் கணவரிடம் கேட்டதை நினைவில் வைத்துக் கொண்ட குழந்தை அவர் வரும்போது " அம்மா கஞ்சன் மாமா வந்து இருக்கிறார் என்று சொல்ல நேரிடலாம்.

தீய சொற்களைப் பேசுவதைத் தவிருங்கள் அதிலும் குழந்தைகள் முன்னிலையில் பேசுவதை அறவே தவிருங்கள். நீங்கள் பேசுவதை கவனித்துத்தான் உங்கள் குழந்தை பேசுகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சிறு குழந்தைகளை மிரட்டும்போது "கொன்னுடுவேன், தலையை திருகிடுவேன், கையை உடைப்பேன்" போன்ற வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள்.

சில தாய்மார்கள் சில விஷயங்களை தங்கள் கணவரிடம் இருந்து மறைக்க விரும்புவார். எனவே, குழந்தைகளிடம் அப்பாகிட்டே சொல்லிடாதே என்று கூறுவர். அப்படி நீங்கள் சொன்னால். உங்கள் கணவர் முன்னிலையிலேயே அப்பாகிட்ட சொல்லிடுவேன் என்று மிரட்டும்.

குழந்தைகளிடம் அவர்கள் டீச்சரை பற்றி கமெண்ட் அடிக்கக் கூடாது "உங்க டீச்சருக்கு வேற வேலை இல்லை. உங்க டீச்சருக்கே ஒன்னும் தெரியலே போன்ற வார்த்தைகளை அவர்களிடம் கூறக் கூடாது அப்படி கூறினால் குழந்தைகள் அவர்கள் ஆசிரியர் மீது வைத்திருக்கும் மதிப்பு குறைந்து அவர்களது படிப்பை பாதிக்க வழிவகுக்கும்.



குழந்தைக்கு எதற்கெடுத்தாலும் காசு கொடுத்துப் பழக்ககூடாது. அதிலும் கமிஷன் கொடுத்து பழக்கப்படுத்துவது கூடாது கடைக்குப் போய் ஷாம்பு வாங்கி வந்தால் உனக்கு சாக்லேட் வாங்க காசு தருவேன் என்பதுபோல பேசுவதை தவிருங்கள். இல்லாவிட்டால், நாளடைவில் ஒவ்வொன்றிற்கும் காசை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

குழந்தைகள் முன்னிலையில் தரமான படங்களையே பார்க்க வேண்டும் நீங்கள் வாங்கும் புத்தகங்களும் தரமாக இருக்கிறதா? என்று பார்த்து வாங்கவும்.

உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள் அப்படி பேசினால் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை வளரும்.

படிப்பு விஷயத்தில் குழந்தைகளைக் கண்டிக்கும்போது பாசிடிவ் அப்ரோச் இருக்க வேண்டும். நீ நன்றாக படித்தால் டாக்டராவாய் நன்றாக விளையாடினால் பெரிய ஸ்போர்ட்ஸ் மேன் ஆகலாம். என்று கூறி ஊக்கப்படுத்த வேண்டும். நீ படிக்கிற படிப்புக்கு பியூன் வேலை கூட கிடைக்காது. இந்த மார்க் வாங்கினா மாடுதான் மேய்க்கலாம் என்றெல்லாம் பேசி பிஞ்சு மனதை வேதனை அடையச் செய்யக்கூடாது.

குழந்தை முன்னிலையில் உங்கள் கணவர் வீட்டில் இருக்கும் பிற நபர்கள் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, புகையிலை போன்ற செயல்களை மேற்கொள்ள ஒரு போதும் அனுமதிக்காதீர்.

## ஜோக்ஸ்

**புதுக்குறள்**

சைட் அடித்து வாழ்வோரே வாழ்வார் - லவ் செய்வோர்
பீல் பண்ணியே சாவார்

பீடியால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
லேடியால் சுட்ட மனம்

எப்பிகர் யார் யார் நோக்கினும் - அப்பிகரை
பிக்கப் பண்ணுவதே அறிவு

பெற்ற பையனுக்கும் கொஷ்யன் பேப்பருக்கும் ஒரு ஒற்றுமை இருக்குத் தெரியுமா? இரண்டையுமே திருத்தமுடியாது

**தயாரிப்பாளர்:** படத்தோட பெயரைக் கேட்ட மாணவர்கள் எல்லாம் அதிரனும் அப்படி ஒரு படப்பெயர் சொல்லுங்க

**இயக்குனர்:** நாளைக்கு பரீட்சை

**நகுலேஸ்வரன் அபிராமி**
வேல் முருகன் ஜுவலர்ஸ் -87A, கண்டி வீதி, வவுனியா.


**மாதநிலா வின்
சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 20/- | தபால் மூலம் பெறுவதற்கு | |
| 1 வருட சந்தா | 240/- | 1 வருட சந்தா | 430/- |
| 6 மாத சந்தா | 120/- | 6 மாத சந்தா | 215/- |
| 3 மாத சந்தா | 60/- | | |


மேலும் விபரங்களுக்காக..
024 222 5799 077 900 9491
மின்னஞ்சல்:
mathanila@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் ஆசிரியரின் வகிபாகம்

சென்றமாத தொடர்ச்சி...



ஆசிரியர்கள் கலைத்திட்டத்தினை நிறைவு செய்வதில் கருத்தாக இருக்கும் போது மாணவர்கள் விளங்க வேண்டிய எண்ணக்கருக்களுக்கு ஆசிரியர்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இவ்வகைச் செயல் முறையால் மாணவர்கள் தங்களது ஐயப்பாடுகளைத் தீர்க்க வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே மாணவர்களுடன் இணைந்து அவர்களின் தேவையை அறிந்து செயற்படும் போது பிள்ளை மையக் கல்வியில் ஆசிரியர் வழிகாட்டப்படுவர் என்ற வகிபாகத்தின் மூலம் கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் முன்னிற்கின்றார்.

கலைத்திட்டமானது காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்றது. அம் மாற்றம் ஆசிரியரது கற்பித்தல் முறைகளிலும், அவரது வாண்மைத்துவத்திலும், கற்பித்தல் பொருளடக்கத்திலும், பாடப்பொருளிலும், குறிக்கோள்களிலும், தேர்ச்சிகளிலும்மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. ஓர் ஆசிரியர் கலைத்திட்டமாற்றங்களை உள்வாங்கிஅதனை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். தனது வாண்மையை விருத்தி செய்வதிலும், பாடப் புலமையை அடைவதும் முக்கியமாகின்றன. உதாரணமாக கலைத்திட்டமாற்றத்தின் போது பாடப் புத்தகத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் பொழுது ஆசிரியர் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினை முதலில் பெற வேண்டும். அத்துடன் அதனை அறிவதற்காகப் பயிற்சிகளில் ஈடுபடுவதுடன் பயிற்சிகளில் பெற்ற விடயங்களை நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும். தேடலும், ஆராய்விலும் ஆசிரியர் இதனை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே கலைத்திட்டமானது வெற்றியளிக்கும்.

கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுமிடத்து அதனை உள்வாங்க வேண்டும். ஆசிரியர் ஒரு வழிகாட்டியாக இங்கு செயற்பட வேண்டும். இன்று கலைத்திட்டத்திலே கல்விமறுசீரமைப்புச் செய்யப்பட்டபோது "5நு" என்ற கற்பித்தல் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் மாணவர்களின் செயற்பாடு முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆராய்வூக்கம் உடையவர்கள் அவர்களுடைய திறன்களை ஊக்குவிக்க வேண்டும்.

குழுவாகச் செயற்பட்டு தலைமைத்துவப்பண்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். எனினும் "5நு" முறையை எத்தனை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள் நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்பது கேள்விக்குரியதாகவேவுள்ளது. இவ்விடத்திலே ஆசிரியர் கற்கை நெறியிலுள்ள மாணவர் எண்ணிக்கை, கற்பித்தலுக்கான நேரமும் இடவசதியும், கிடைக்கத்தக்க ஊடகமும் வசதியும், குறித்த முறையைக் கையாள்வதில் ஆசிரியரது தேர்ச்சி என்பவற்றை ஆசிரியர் புரிந்து செயற்படும் போதே கலைத்திட்டமானது வெற்றியளிக்கும்.

கலைத்திட்ட உருவாக்கத்திலே மதிப்பீடு என்பது முக்கியம் பெறுகின்றது. இம் மதிப்பீடு குறிப்பிட்ட கற்கைநெறியின் குறிக்கோள்களும் நோக்கங்களும் மாணவர் தொடர்பாக எந்தளவு நிறைவேறியுள்ளன எனத் தீர்மானித்தல் முக்கியமாகும். இது மாணவரது அடைவு மற்றும் ஆற்றுகை தொடர்பான மதிப்பீடுகளால் இனங்காணமுடியும். கலைத்திட்டம் தொடர்பான பின்னூட்டல் தகவல்களைப் பெறும் நோக்குடன் மதிப்பீடு செய்தல், பின்னூட்டல் தொடர்பான கற்கைநெறிக் குறைபாடுகள், நிறைவுகளைக் கண்டறிவது இதன் நோக்கமாகும். இதனூடாக இவற்றை எதிர்காலத்தில் திருத்தியமைக்க முடியும். ஏதை மதிப்பிடுவது எவ்வாறு மதிப்பிடுவது எப்போது மதிப்பிடுவது என்பதை கலைத்திட்டமானது கொள்கைகளாக வகுத்துள்ளது. ஆனாலும் இதன்படி மதிப்பீடு செய்ய முடியாது.

மாணவர்களது ஆற்றுகைகள்திறன்கள் , மனப்பாங்குகள் சுயநம்பிக்கைகள், அறிகை என்பவற்றை ஆசிரியர் நேரடியாக அவதானிப்பதன்மூலமும், எழுத்துப்பரீட்சை, கொள்கைகளின் குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளனவா? என்பதை அர்ப்பணிப்பும், சமூக நோக்கும், மாணவர் மீதான அக்கறையும் கொண்ட ஆசிரியர் ஒருவராலேயே மேற்கொள்ள முடியும். இதன் அர்த்தம் கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலானது ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றது.

இவ்வாறாக கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலில் ஆசிரியரின் கைகள் செயற்பட்டாலும் கூட ஆசிரியர்களிடத்தும், புறச்சூழலிலும் சில மட்டப்பாடுகள் காணப்படுகின்றன.

ஆசிரியர் நியமங்கள் இங்கு முக்கியமானதாகும். வேலையற்றுத் திரிபவர்கள் இறுதியாகத் தெரிவு செய்யும் தொழில் ஆசிரியர் தொழில் என்று கூறுகின்றமை ஒரு மட்டுப்படுகின்றது. இங்கு ஆசிரியர் தொழில் என்று கூறுகின்றமை ஒரு மட்டுப்பாடாகின்றது. இங்கு ஆசிரியர் என்ற நியமனம் கிடைத்ததால் அத்தொழிலைச் செய்கின்றனர். ஆசிரியர் தொழிலை விரும்பிச் செய்யாத நிலையில் கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலானது கேள்விக் குள்ளாகின்றது.


வளரும்...

**சு.ஜெயச்சந்திரன்**
ஆசிரிய நிலைய முகாமையாளர்
புளியங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை வளர என்ன சாப்பிடலாம்?




ஞாபகசக்தி குறைவாக இருக்கிறதா? எதிலும் அதிக கவனத்துடன் ஈடுபட முடியவில்லையா? மூளை சரியாகச் செயல் படவும் நன்றாக வளரவும் தேவையாக சத்துக்கள் நாம் சாப்பிடும் உணவிலிருந்து கிடைக்காததே இதற்கு காரணம். கரட், தக்காளி, திராட்சை, ஆரஞ்சு, சொரி போன்ற பள பளப்பான வண்ண உணவுகளில் மூளைக்கு மிகத் தேவையான வைட்டமின்கள், மினரல்கள், பைட்டோ கெமிக்கல்கள் நிறைந்துள்ளன. ஒரு வாரம் கரட் சாப்பிட்டவர்களையும், கரட் சாப்பிடாதவர்களையும் பரிசோதித்தபோது, கரட் சாப்பிட்டவர்களின் மூளைத் திறன் மிகச்சிறப்பாக இருந்தது என்கிறது மனோதத்துவ பேராசிரியர் பால்கோல்ட் என்பவரின் ஆய்வு முடிவுகள்.

இந்த உணவுகள் மூலம் மூளையில் செரேட்டனின், அசிட்டின் கோலைன் என்ற இரசாயனப் பொருட்கள் உற்பத்தியாகி உடல் இயக்கத்தில் கலப்பது தான் இதற்குக் காரணம் மூளையின் ஞாபக சக்தியை சிறப்பாக தக்க வைத்துக்கொள்வதற்கு கொழுப்பு சத்து தேவை. இதற்கு மீனிலிருந்தும், மீன் எண்ணெயிலிருந்தும் கிடைக்கும் என் 3 என்ற கொழுப்பு அமிலமே தினமும் தேவை. நல்ல முடிவை திடீரென்று எடுக்க மீனும் ஏதேனும் ஓர் இனிப்பும் போதுமாம். சைவ உணவுக்காரர்கள் சோயா எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றை உபயோகிக்கலாம்.

மனித உடலிலே மூளைதான் அதிக ஆக்ஸிஜனை உபயோகிப்பது, எனவே, மூளையின் செல்கள் அழியாதிருக்க பைட்டோ கெமிக்கல் உள்ள உணவுகள் தேவை, இத்துடன் மூளை பலவீனம், குழப்பம், நோய்த்தாக்குதல், அல்சீமெர்ஸ் என்ற ஞாபக மறதி நோய் முதலியன ஏற்படாமல் இருக்க பி, ஏ, ஈ ஆகிய வைட்டமின் உள்ள உணவுகளும் தேவை. மிகவும் கூர்மையாகச் சிந்தித்து முடிவு எடுக்கச் சர்க்கரை உதவும். இதற்கு பழம் அல்லது இனிப்பு வகைகள் சாப்பிடவும், அரிசி ரொட்டி, கோதுமை, உருளைக்கிழங்கு முதலியன கோபம் மற்றும் கோபம் போன்ற உணர்ச்சிகளை மெல்ல மெல்லக் கட்டுப்படுத்திவிடும்.

மூளையைச் சரியாக பாதுகாப்பாக பராமரிப்பதுடன் நல்ல மனப்பாங்கையும், காரியத்தைச் செய்து முடிக்கும் விடா முயற்சியையும் பெர்சி மற்றும் சொரி பழங்கள், அப்ரிகாட், பீச் அவரைக்காய் முதலியன தந்து விடுகின்றன. மனதை அமைதிப்படுத்தி, தன்னம்பிக்கையை உணர்த்துவது வெள்ளைப்பூண்டு, மூளையின் செல்கள் வேகமாக அழிந்து போய்விடாமல் பாதுகாப்பதில் வெள்ளைப் பூண்டுக்கு நிகர் வேறு இல்லை. ஞாபக சக்தி உள்ள உயிரினங்கள் எல்லாம் நீண்ட நாள் வாழ்கின்றன. எனவே, ஞாபக சக்தி அழியாமல் இருக்க வெள்ளைப் பூண்டைத் தவறாமல் சாப்பிடவும்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் 54 முதல் 84 வயது வரை உள்ள ஆண்களை ஆராய்ந்து வந்தார்கள். இவர்கள் உடலில் பி வைட்டமின்கள் போதுமான அளவு இருந்தவர்கள் நல்ல ஞாபக சக்தியுடனும் சிறப்பான மூளைச் செயல் பாடும் உடையவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களில் பி6 பி12 பே லேட் ஆகிய வைட்டமின்கள் குறைவாக இருந்தவர்கள் மிகவும் மறதியும் மனக்குழப்பமும் உடையவர்களாக இருந்தனர்.

பி வைட்டமினைச் சேர்ந்த இந்த மூன்று வைட்டமின்களும் நரம்புகளின் மூலம் மூளைக்கு தெளிவாகச் செய்திகளை அனுப்பி மூளை அமைதியுடன் குழப்பமில்லாமல் வேலை செய்ய உதவுகிறது என்பதை மட்டும் உறுதியாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்த வைட்டமின்கள் குறையும் போது தீய அமிலங்கள் மூளைக்கு மிக மெதுவாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் மூளையின் செயல்பாடுகளில் குழப்பம் ஏற்படுகின்றது. மதிய உணவில் தயிர் சாதமும் கீரையும் இருந்தால் இந்த வைட்டமின்கள் நன்கு நம் உடலில் சேர்ந்துவிடும்.

## நாய்க்கு பிறந்தது பூனையாகுமா?

பொதுவாக ஒரு உயிரினத்திற்கு அதே இனம்தான் பிறக்கும். ஆனால் ஒரு நாய் பூனைக்குட்டியை ஈன்றுள்ள அதிசயம் நடந்துள்ளது. கொரியாவை சேர்ந்த ஜியாங் பியாங் என்பவர் இவர் தனது வீட்டில் ஒரு பெண் நாயை செல்லமாக வளர்த்து வந்தார். கர்ப்பமாக இருந்த அந்த நாய் குட்டி ஈன்றது. அது பூனைக்குட்டி போன்ற தோற்றத்தில் உள்ளது. நாயும் அந்த குட்டியை மிகவும் பாசத்துடன் பராமரித்து வருகிறது. இதைப் பார்த்த ஜியாங் பியாங் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் அடைந்தார். இந்த அதியத்தை தன் கண்ணால் நம்ப முடியவில்லை என்கிறார். இது குறித்து, அறிவியல் நிபுணர்களும், கால்நடை டாக்டர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். மரபியல் ரீதியாக இதுபோன்ற மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என கூறியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மொபைல் எங்கு தயாரிக்கப்பட்டது என்று கண்டு பிடிக்க

NOKIA
Connecting People

நாம் பயன்படுத்தும் அல்லது வாங்கும் நோக்கியா மொபைல் தரமானதா என்று எப்படி தெரிந்துகொள்வது? கடைக்காரர் எல்லா போன்களும் தரமானது என்று சொல்லுவார் உங்கள் நோக்கியா போனின் தரத்தை எளிதில் கண்டுபிடிக்கலாம். கடைக்காரிடம் போனை வாங்கி *#06# டயல் செய்தால் சில எண்கள் வரும்.

இதை IMEI நம்பர் என்று சொல்லுவார்கள். (International Mobile Equipment Identity) பிறகு அந்த எண்களில் ஏழாவது மற்றும் எட்டாவது இலக்கங்களை பாருங்கள்.

**ஏழாவது மற்றும் எட்டாவது இலக்கம்**

02 அல்லது 20 என்றால் அந்த போன் தயாரான நாடு EMIRATES, தரம் மோசம்

08 அல்லது 80 என்றால் அந்த போன் தயாரான நாடு GERMANY தரம் சுமார்

01 அல்லது 10 என்றால் அந்த போன் தயாரான நாடு FINLAND தரம் நல்ல தரம்

04 என்றால் அந்த போன் தயாரான நாடு CHINA தரம் நல்ல தரம்

(China என்றதும் பயப்பட வேண்டாம் அதனுடைய Software வேறு நாட்டில் தயாரிக்கப்பட்டது)

03 என்றால் அந்த போன் தயாரான நாடு KOREA தரம் நல்ல தரம்

05 என்றால் அந்த போன் தயாரான நாடு BRAZIL தரம் சுமார்

00 என்றால் அந்த போன் ஒரிஜினல் நோக்கியா தொழிற்சாலையில் தயாரானது. தரம் மிக மிக நல்ல தரம், மற்றும் உடலுக்கு எந்த தீங்கும் இழைக்காது.

13 என்றால் அந்த போன் தயாரான நாடு AZERBAIJAN தரம் மிக மோசமான தரம் எளிதில் பழுதடையும் மேலும் உங்கள் உடலுக்கு தீங்கானது.

இனிமேல் NOKIA MOBILE வாங்க சென்றால் எங்களுடைய இந்த **மாதநிலா** புத்தகத்தை எடுத்துக்கொண்டு போங்க

இதன் பிறகும் கடைக்காரரிடம் இருந்து நீங்கள் ஏமாறுவீர்களா?

## தொழில் முயற்சியாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள்


1 நல்லவிதமான மனப்பாங்கு
2 நேரிய சிந்தனை
3 நல்ல பண்புகளும் நோக்கும்
4 ஆபத்தினை எதிர்கொள்ளல்
5 ஆக்கபூர்மான சிந்தனை
6 சூழல் குறித்தான விழிப்புணர்வு
7 பணம் சம்பாதிக்க வேண்டிய விருப்பு
8 தீர்மானங்களை எடுக்கும் பண்பு
9 தொடக்கி வைக்கும் ஆற்றல்
10 தொழில்நுட்பத்திறன்
11 தற்துணிவு
12 திறந்த மனப்பான்மை
13 தன்னம்பிக்கை
14 சவால்களை சந்திக்கத் தயாராகுதல்
15 சூழ்நிலை குறித்தான விழிப்புணர்வு
16 முன்கூட்டியே திட்டமிடல்
17 எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தேவை
18 முதிர்ச்சி
19 பூரண அர்ப்பணிப்பு
20 ஒழுங்கமைக்கும் பண்பு
21 புத்தாக்கத் திறன்
22 சுதந்திரமாக செயற்படல்
23 வேலையில் ஆர்வமும், விருப்பும்
24 சந்தையை நோக்கிய செயற்பாடு
25 வேலையில் பயபக்தி
26 நல்ல சமூக உறவு

—SK—

# பாட்டி வைத்தியம்

## தலைசுற்றுக்கு கறிவேப்பிலை தைலம்!

இயற்கை வைத்தியம்



பெரியோர் முதல் சிறியோர் வரை தலைவலியை உணராதவர்களே இருக்க முடியாது. அதோடு தலைச்சுற்று வந்தால் சொல்லவே வேணாம். இதிலிருந்து விடுதலை பெற இயற்கையின் வரப்பிரசாதமான கறிவேப்பிலை நமக்கு பெரிதும் உதவுகிறது. தலைச்சுற்றை அடியோடு விரட்டும் கறிவேப்பிலை தைலம் இதோ...

கறிவேப்பிலை-200கிராம்
பச்சை கொத்தமல்லி-50 கிராம்
சீரகம்-50 கிராம்
நல்லெண்ணெய்-600 கிராம்
பசுவின் பால்-200 கிராம்

கறிவேப்பிலையை காம்புகள் நீக்கி நன்றாக அரைத்துக் கொள்ளவும். பச்சைக் கொத்துமல்லியையும் மையாக அரைத்துக் கொள்ளவும்.

சீரகத்தை சுத்தம் செய்து மண் சட்டியில் போட்டு 200 மி.லி. பாலை ஊற்றி ஆறு மணி நேரம் மூடி வைத்திருந்து சீரகத்தை எடுத்து நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு மண்பானையில் நல்லெண்ணையை ஊற்றி அடுப்பில் வைத்து சிறிது சூடேறியதும் அரைத்து வைத்துள்ள கறிவேப்பிலையை போடவும் அதன் பின் ஐந்து நிமிடங்கள் மேலும் சூடேறிய பிறகு பச்சை கொத்துமல்லியைப் போடவும். அதன் பின் ஐந்து நிமிடங்கள் கழித்து சீரகத்தையும் போட்டு, தைலப்பதம் வந்ததும் இறக்கி ஆறவிடவும். ஆறியதும் மெல்லிய துணியில் வடிகட்டிக்கொள்ளவும்.

நான்கு நாட்களுக்கு ஒரு முறை நல்லெண்ணெக்கு பதிலாக கறிவேப்பிலைத் தைலத்தை தேய்த்து குளிக்கலாம். தைலத்தை தேய்த்து குளிக்கும் அன்று குளிர்ந்த உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரனில் காற்று இல்லாதது ஏன்?

பூமியின் புவியீர்ப்பு விசையைக் காட்டிலும் சந்திரனின் ஈர்ப்புவிசை ஆறுமடங்கு குறைவு. பூமியில் ஈர்ப்பு விசை இருப்பதால் தான் அந்த விசை காற்றும் மண்டலத்தை இழுத்துப் படித்து வைத்து இருக்கிறது. அத்தகைய விசை சந்திரனுக்கு இல்லாததால் அங்கே காற்று இல்லை சந்திரனோடு ஒப்பிடும்போது செவ்வாயின் ஈர்ப்புவிசை கொஞ்சம் பரவாயில்லை பூமியின் ஈர்ப்பு விசையின் பாதியளவு உள்ளது. இதன் காரணமாக அங்கே கொஞ்சம் காற்று உள்ளது. எனவேதான் அங்கு உயிர்க்ள வாய்ப்பிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

வியாழக் கிரகத்தின் ஈர்ப்பு விசை பூமியைக் காட்டிலும் 350 மடங்கு அதிகம் இந்த ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு நாள்தோறும் விண்கற்கள் வியாழனில் விழுந்து கொண்டேயிருக்கின்றன. வால் நட்சத்திரங்களும் அடிக்கடி வந்து மோதுவது உண்டு. இந்த அபாயகரமான ஈர்ப்பு விசையால் வியாழனில் மனிதன் உயிர் வாழ இயலாது.






## 2019ம் ஆண்டு பூமியை விண்கலம் தாக்குமா?

2002 என்.டி.7 (2002.N.T.7) என்ற விண்கல் ஒன்று விநாடிக்கு 25 கிலோமீற்றர் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இது 2019வது ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தேதி பூமியைத் தாக்கும் என்று விஞ்ஞானிகள் நாள் குறித்தனர். இந்த விண்கல்லின் அகலம் 3 கிலோமீற்றர். இது பூமியின் மீது மோதினால் 77 லட்சம் அணுகுண்டுகள் வெடித்தது போன்ற பேரழிவு ஏற்படும் பூமியில் ஐந்தில் ஒரு பகுதி அழிந்துவிடும்.

கடல்பகுதியில் மூன்றில் ஒரு பகுதி வற்றி விடும். தொடர்ந்து 16 மணிநேரம் வானம் இருட்டாக இருக்கும். 12 கோடி பேர் இறந்து போவார்கள். ஓசோன் படலத்தில் பெரிய ஓட்டை விழுந்தது பகலில் அதிக வெப்பமும். இரவில் அதிககுளிரும் இருக்கும் என்று ஆல்ஸ்டர் அப்ஸர்வேஷன் துறையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஆனால் பின்னர் வெளியான ஆராய்ச்சி முடிவுகள் இந்த விண்கல் பூமியைத் தாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அப்படியே பூமியின் பாதையில் வந்தாலும் அதைத் தாக்கி அழிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். விண்கற்கள் பூமியின் பாதையில் வருவதும், பின்பு அவை விலகிச் செல்வதும் விண்வெளி வரலாற்றில் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளே எனவே பயம் கொள்ளத் தேவையில்லை.

**பூமியானது தன்னையும் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றிவருகின்றது என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்திருப்பீர்கள். பூமியில் இருக்கும் நாம் முதலில் நம்மைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அவதானித்துக்கொள்ள வேண்டும் என்பதை பூமி சொல்லித்தரும் பாடமாக அறிந்துகொள்வோம் அத்தோடு இதையும் அறிந்து கொள்ளுங்கள்.**




பூமியின் நீர்ப்பரப்பு: 139,440,000 கி.மீ
பூமியின் நிலப்பரப்பு: 14 கோடி 90லட்சம் கி.மீஒகி.மீ
பூமியின் விட்டம்: 7920 கி.மீ
பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் 240,000 கி.மீ
பூமியிலிருந்து வாயு பரந்திருக்கும் தூரம்: 1000கி மீ
பூமி சுழலும் வேகம்: 66,600 கி.மீ மணிக்கு
பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்போது: அமாவாசை
சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது: பௌர்ணமி
பூமி சுழலும் பக்கம்: மேற்கிலிருந்து கிழக்காக
பூமிக்கு சூரிய ஒளி வர எடுக்கும் நேரம்: 480 விநாடிகள்
சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும் சந்திரன் சூரியனை மறைப்பதால் ஏற்படும் நிழல் பூமியின் மீது விழும் போது சூரிய கிரகணம் ஏற்படும் அதாவது அமாவாசையில் வரும்.
சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வரும் பூமியின் நிழல் சந்திரனை மறைக்கும் போது சந்திரகிரகணம் ஏற்படும் அதாவது பௌர்ணமியில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்




| | | |
|---|---|---|
| பெயர் | : | ................................................ |
| முகவரி | : | ................................................ |
| பாடசாலை | : | ................................................ |
| தரம் | : | ................................................ |
| வகுப்பாசிரியர் ஒப்பம் | : | ................................................ |
| தொ.பே.இல | : | ................................................ |

**குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
**"மாதநிலா"**
இல:172B, மில் வீதி, வவுனியா.
024 222 5799 077 900 9491
email:mathanila@yahoo.com

உங்கள் ஆக்கங்களை 07.09.2012 க்கு முன் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். பிரபல சித்திர ஆசிரியர் "காவலூர்" **விஜேந்திரன்** அவர்களின் முடிவுகளின் பின் சிறந்த ஆக்கத்திற்கு பாடசாலை உபகரண பரிசுப் பொருட்கள் பரிசாக வழங்கப்படும். அத்தோடு அவர்களின் ஆக்கங்களும் பெயர் விபரமும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01.08.2012 தொடக்கம் 01.09.2012 காலப்பகுதிக்கான

# இராசிபலன்

### மேஷம்- அஷ்வினி, பரணி, கார்த்திகை

மற்றவர்களின் ஆலோசனைகளை ஆராய்ந்து செயலாற்றும் பண்பு கொண்ட உங்களுக்கு குரு, செவ்வாய், மற்றும் இவை தனஸ் தானத்தில் மற்றும் சனி 6 இலும் சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை ஏற்படுத்தும். 8ல் ராகு சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை குடும்பத்தில் ஒற்றுமையும், நினைத்த காரியங்களை நிறைவேற்றும் ஆற்றலும் நிலவும். புத்திர வழியில் பூரிப்பு ஏற்படும். கொடுக்கல் வாங்கலிலும் சரளமான நிலை இருக்கும். உத்தியோகத்தர்கள் நிறைவான உயவுகளைப் பெற முடியும். வெளியூர், வெளிநாடு சென்று பணியாற்ற எண்ணுபவர்களின் எண்ணமும் ஈடேறும். பொன், பொருள் சேரும். வியாபாரத்திலும் லாபங்கள் அதிகரிக்கும் அரசுவழியில் நல்ல ஆதரவு கிட்டும்.

### ரிஷபம்-கார்த்திகை 2,3,4ம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்

இனிமையான சுபாவமும் அறிவாற்றலும் கொண்டவர்கள் நீங்கள் உங்களது ஜென்மராசியில் குருவும் 2ல் சூரியனும் சஞ்சரிப்பது தேவையற்ற நெருக்கடிகளையும். நிம்மதிக் குறைவினையும் ஏற்படுத்தும். ஆயினும் மாத பிற்பகுதியில் சூரியன் 3லும் செவ்வாய் 6இலும் சஞ்சரிக்க இருப்பதால் நினைத்ததை நிறைவேற்றக்கூடிய ஆற்றலும் வலிமையும் அமையும். பணவரவுகளில் இருந்த தடைகள் விலகி படிப்படியான முன்னேற்றம் உண்டாகும். கொடுத்த வாக்கினையும் காப்பாற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் விலகி முன்னேற்றத்தை அடைவீர்கள். உத்தியோகஸ்த்தர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த பதவி உயர்வுகளும் கிடைக்கப் பெறும் கடன்களும் படிப்படியாக விலகும் இம்மாதம்.

நீங்கள் தட்சணா மூர்த்தியை வழிபடுவது உத்தமம்.

### மிதுனம்- மிருகசீரிடம் 3, 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1,2ம் பாதங்கள்

ஆடம்பர வாழ்வில் பிரியமான உங்களுக்கு விரயஸ்தானத்தில் குருவும் 4ல் செவ்வாய், சனி சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பு ஆயின் மாத பிற்பாதியில் சூரியன் 3இல் சஞ்சரிக்க இருப்பதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும் எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயல்படுவது நன்று கொடுத்த கடன்களை திருப்பிப் பெற முடியாது உற்றார் உறவினர்கள் உதவி கேட்பீர்களோ எனப் பயந்து அவர்களே ஒதுங்கிவிடுவர். பணவரவுகள் சுமாராகவே இருக்கும் ஆதலால் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. தொழில் வியாபாரம் சற்று மந்தநிலையில் அமைந்தாலும் தேக்கமடையாமல் லாபம் பெற முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நீங்கள் இம்மாதம் முருகப் பெருமானை வழிபடுவது மிகவும் நல்ல பலனைத்தரும்.

### கடகம்-புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்

உயர்ந்த லட்சியங்களைக் கொண்ட உங்களுக்கு செவ்வாய், சனி 3இலும் குரு, கேது 11இலும் சஞ்சரிப்பது இம்மாதமும் ஏற்ற மிகு பலன்களை அதிகரிக்கும். ஜென்ம ராசியில் மாதமுற்பாதியில் சூரியன் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நலமளிக்கும் பணவரவுகள் சிறப்பானதாகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் விலகிய உறவினர்களும் நண்பர்கள் ஆவார்கள். பொன், பொருள் சேரும் சிலருக்கு திருமண சுபகாரியங்கள் நிறைவுறும். பூமி. மனை வாங்கும் யோகம் மற்றும் புது மனைகட்டி குடிபுகும் வாய்ப்பும் உண்டாகும். பணம் கொடுக்கல் வாங்கலிலும் சரளமான நிலை இடம் பெறும் உத்தியோகஸ்த்தர்கள் தங்கள் பணிகளில் நல்ல உயர்வினைப் பெறுவர்.

நீங்கள் இம்மாதம் துர்க்கை அம்மனை வழிபடுவது நல மளிக்கும்.

### சிம்மம்-மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்

தனக்கு நிகரானவர்களையே தேர்ந்து பழகும் உங்களுக்கு 2ல் செவ்வாய், சனியும் 12ல் சூரியனும் சஞ்சரிப்பது குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்தலாம். கணவன் மனைவியிடையே அன்னியோன்னியம் குறைவடையும். உடலில் உஷ்ண சம்பந்தப்பட்ட பிரச்சனையும், கண்ணில் கோளாறும் ஏற்படவாய்ப்புண்டு. வண்டி ,வாகனங்களில் பயணம் செய்யும் போது வேகத்தைக் குறைப்பதும் அதிலும் நிதானத்துடனும் செயற்படுவதும் நல்லது. பணவரவுகள் தேவைக் கேற்றபடி இருந்தாலும் ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்பது நலமாகும். தொழில் ரீதியில் மந்தநிலை ஏற்பட்டாலும் பொருட் தேக்கம் ஏற்படாது. நீங்கள் நல்லதாக நினைத்து செய்யும் சில காரியங்களும் சிலருக்கு வீண் பிரச்சனைகளை ஏற்படுத்தும் எனவே எதிலும் கவனத்தடன் இருப்பது நன்று.

முருகப் பெருமானை வழிபடுவது நற்பலன் தரும்.

### கன்னி-உத்தரம்3, 4ம் பாதம், அத்தம், சித்திரை1, 2ம் பாதம்

அகம்பாவம், ஆடம்பரம் இவை இல்லாத உங்களுக்கு ஜென்ம ராசியை குரு பார்வை செய்வதும் சூரியனும் , புதனும் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதும் அற்புதமானது என்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் நன் நிகழ்ச்சிகள் இடம் பெறும் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். ஆடம்பர செலவுகளைக் குறைப்பதும் பிறரை நம்பி வாக்குறுதி கொடுப்பதையும் தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சோர்வு நிலை ஏற்பட்டாலும் குரு பார்வை இருப்பதால் பெரிய கெடுதியில்லை. கணவன், மனைவி சற்று அனுசரித்து செல்வது நலமாகும். உத்தியோகஸ்த்தர்களும் பணியில் வேலைப்பளு அதிகரித்தாலும் உயரதிகாரிகளின் ஆதரவுகள் மன நிம்மதியை அளிக்கும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் நிலவக் கூடிய காலம் என்பதால் கையிலிருக்கும் வாய்ப்புக்களை நழுவவிடா திருப்பது நல்லது.

இம் மாதம் நீங்கள் சனீஸ்வரனை வழிபடுவது நன்று.

### துலாம்-சித்திரை 3,4ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதம்

வெற்றி, தோல்வியை சமமாக கருதும் உங்களுக்கு குரு, சனி சாதகமற்று சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் ஏற்படும் என்பதாலும் மாதமுற்பாதியில் சூரியன் 10ல் பலமாக சஞ்சரிப்பதால் தொழில் ரீதியில் ஓரளவுக்கு முன்னேற்றம் பெறுவீர்கள். புதிய வாய்ப்புக்கள் சில தேடிவரும் உதவிகளும் கிட்டும். எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டு பின் வெற்றியினை அடைவீர்கள். உற்றார் உறவினர்களின் ஆதரவும் சிறப்பாக இருக்கும் எனக் கூற முடியாது. வாகனங்களை ஓட்டும் போது வேகத்தைக் குறைத்தும் நிதானத்துடனும் நடந்து கொள்வது நல்லது.

குரு, சனிக்கு பரிகாரம் செய்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருச்சிகம்-விசாகம்4, அனுஷம்,கேட்டை

தமது கொள்கையிலிருந்து மாறாக எண்ணம் கொண்ட உங்களுக்கு குரு 7இலும் சூரியன் 9இலும் செவ்வாய் சனி 11இலும் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் தாராள தனவரவுகளும் மகிழ்ச்சி தரும் நிகழ்வுகளும் இடம் பெறும் எதிர்பாராத திடீர் தனவரவுகள் ஏற்படும். கடன்கள் படிப்படியாக குறைந்து கண்ணியமான வாழ்வு ஏற்படும். உங்களை விட்டு விலகிச் சென்ற உறவுகள் சேர்ந்து ஒற்றுமை பாராட்டும். உதவிகேட்டால் ஒதுங்கியவர் கூட தற்போது உங்களுக்கு உதவிக்காக காத்திருப்பார்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் பெருகும் கூட்டாளிகளும் நம்பிக்கைக்குரியவர்களாக செயற்படுவர். உத்தியோகஸ்த்தர்களுக்கு உயர்வுகள் உண்டாகும்.

### தனுசு-மூலம், பூராடம், உத்தராடம்

தாம் கற்றதை பிறருக்குக் கற்றுக் கொடுக்கும் பண்பு கொண்ட உங்களுக்கு சுக்கிரன் 6இலும் சூரியன், புதன் 8இலும் சஞ்சரிப்பதால் நீங்கள் எதிர்பார்க்கும் உதவிகள் தாமத நிலை ஏற்படும். பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் நிலவக் கூடும் என்பதால் கொடுக்கல் வாங்கலில் கவனத்தடன் இருப்பதும் ஆரம்பச் செலவுகள் குறைப்பதும் நல்லது. குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து நடந்து கொண்டால் தேவையற்ற பிரச்சனைகளைத் தவிர்க்கமுடியும். திருமணம் போன்ற சுபகாரியங்களை சில காலம் தள்ளி வைப்பது நல்லது. உத்தியோகஸ்த்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் சில தாமதங்களுடன் அமையும் வேலைப்பளு அதிகரித்தாலும் உடனிருப்பவர்களின் ஆதரவு கிட்டும்.

இம் மாதம் நீங்கள் மஹாவிஷ்னுவை வழிபடுவது நலம்.

### மகரம்-உத்தராடம் 2,3,4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதம்

அவசியமான செலவுகளையும் சிக்கனமாக செய்யக் கூடிய ஆற்றல் கொண்ட உங்களுக்கு குரு பஞ்சமஸ் தானத்தில் இருப்பது பொருளாதார மேன்மையை ஏற்படுத்தும். ஆயின் சூரியன் மாத முற்பகுதியில் 7 இல் சஞ்சரிப்பதால் நெருக்கியவர்களை அனுசரிப்பது நல்லது. கணவன் மனைவியிடையே கருத்த வேறுபாடு ஏற்படும் கொடுக்கல் வாங்கலிலும் சரளமான நிலையிருக்கும். பொன். பொருள் சேரும் உற்றார் உறவினர்களால் தேவையற்ற மனச்சஞ்சலங்கள் எற்படும். உத்தியோகஸ்த்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும்.

இம்மாதம் சிவபெருமானை வணங்குவது நலமளிக்கும்.

### கும்பம்-அவிட்டம் 3,4ம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ம் பாதம்

வெள்ளை உள்ளமும் நெறிதவறாப் பண்பும் கொண்ட உங்களுக்கு சுக்கிரன் 5 இலும் மாத முற்பகுதியில் சூரியன் 6 இலும் சஞ்சரிப்பது பொருளாதாரத்தில் மேன்மையை ஏற்படுத்தும் கடன் சுமைகள் ஓரளவு குறையும் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உற்றார் உறவினர்கள் ஓரளவிற்கு சாதகமாக இருப்பார்கள். பூர்வீக சொந்தத்தில் இருந்த பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரும். திருமணம் சுபகாரியங்களுக்கான முயற்சிகளும் பலனைப்பெறுவீர்கள். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தவர்களும் உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து நடந்தால் பளுவைக் குறைக்க முடியும்.

ஆஞ்சநேயரை வழிபடும் போது இம்மாதம் நற்பலனைப் பெறலாம்.

### மீனம்-பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி

அனைவரிடமும் ஒளிவு மறைவின்றி பழகக் கூடி உங்களுக்கு குரு 3இலும் செவ்வாய், சனி 7 இலும் சஞ்சரிப்பதால் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. வண்டி வாகனங்களில் பயனம் செய்யும் போது கவனமுடன் இருப்பது நல்லது. பணவரவுகளில் நெருக்கடிகள் நிலவினாலுமு எதையும் சமாளித்து செயற்படும் ஆற்றல் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடந்தால் மட்டுமே நற்பலனை அடைய முடியும். எதிர்பாராத பயங்களால் வீண் அலைச்சல்கள் உண்டானாலும் அதன் மூலம் ஓரளவுக்கு சாதகமான பலன் கிட்டும் கொடுக்கல் வாங்கல் பெரிய முதலீடுகளை ,ஈடுபடுத்துவதைத் தவிர்க்கவும் உத்தியோகஸ்த்தர்களுக்கு பணியில் திருப்தியான நிலையிருக்கும்.

நீங்கள் தட்சணா மூர்த்தியை வழிபாடு செய்யவும்.


**உங்களுக்காக விசேடமாக கணித்துகொடுத்தவர்**
"வேதஆகம உதயசூரியன்"
**ஆதி.சௌந்தரராஜக்குருக்கள்**
முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
பண்டாரிகுளம், வவுனியா.


# சிறுகதை
## [அனுமன் கேட்ட கதை]

குருசேஷத்திரப் போர் தொடங்கியது

துரியோதனன் பக்கமும் பாண்டவர் பக்கமும் கடல் போலப் படை வீரர்கள் அணிவகுத்து நின்றனர். அந்தச் சூழ்நிலையில் அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்தார் கண்ணன்.

எல்லோரும் அறிய கண்ணன் கீதையைச் சொன்னாலும். அதைக் கேட்டது அர்ஜுனனும் அந்தத் தேரில் பறந்து கொண்டிருந்த கொடியில் இருந்த அனுமனும் தான்.

ஐயோ! இவ்வளவு அரிய நல்ல செய்திகளைக் கேட்டும் அதில் பலவற்றை மறந்து விட்டேனே என்ன செய்வேன் என்று புலம்பினான் அர்ஜுனன்.

கொடியில் இருந்த அனுமன். "அர்ஜுனா எல்லாம் எனக்கு நினைவில் இருக்கிறது. உனக்குளந்தெந்தப் பகுதி மறந்து விட்டது சொல். நான் விளக்குகிறேன்" என்றார். கண்ணன் குறுக்கிட்டு அனுமனே! நான் உனக்கு இந்த அறிவுரைகளைச் சொல்லவில்லையே அர்ஜுனனுக்குத் தானே சொன்னேன். என்றுவியப்போடு கேட்டார்.

நான் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கேட்கவில்லை நல்ல செய்திகளை அறிவுரைகளை நீங்கள் வழங்கினீர்கள். என் உள்ளம் அதில் ஈடுபாடு கொண்டது. அதனால் எல்லாச் செய்திகளும் என் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டன. என்று பதில் சொன்னார் அனுமன்.


**நகுலேஸ்வரன் அபிராமி**
வேல் முருகன் ஜுவலர்ஸ்
87A, கண்டி வீதி, வவுனியா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மூளைக்கு வேலை 01

**இடமிருந்து வலம்**

1.பெரியார் வலியுறுத்திய அறிவு
5.மேன்மை உள்ள தமிழ் மாதம் ஒன்று ஒளிந்திருக்கும்
8.கப்பலோட்டிய தமிழன்
4.யானைக்கு எப்போதாவது பிடிப்பது
9.அறிவு உள்ள நல்லவர்களிடம் நாம் வைப்பது
11.இசைக்கருவி குற்றம் இல்லாமல் வாசிக்க வேண்டும்
12.இவை எங்கள் ஜாதி என்றான் பாரதி

**மேலிருந்து கீழ்**

1.புகழ் பெற்ற கால்வாய்
2.ஹேர்டை என்பதை தமிழில் இப்படியும் சொல்லலாம்
3.கிரிக்கட் நடுவர்
4.ரதியான மந்தி வா என அழைக்கும் மோசடிக்காரன்
6.உள்ளம் கோபத்தில் இருந்தால் உதடுகளில் தெரிவது
7.நீர் குடிக்க உதவும் பாத்திரம் ஓர் உலோகமும் கூட
8.இதுவும் ஒரு காலம் இதில் குயில் கூவும்
9.பெண்
10.குதிரை




அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்:
**மாதநிலா**
172B, மில் வீதி, வவுனியா.

**விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்**




**எங்கள் மேன்மைமிகு வாசகர்களே!**

எமது வவுனியா மண்ணின் ஊடாக பல்சுவை அம்சங்களை தாங்கிவருகின்றமை இதுவே முதற்தடவை ஆகும். அந்தவகையில் எங்களின் சேவைகள், ஆக்கங்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு உங்களின் கருத்துக்களும் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன. நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தான் எங்களின் சேவையை செம்மைப்படுத்தும், வளப்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

கருத்துக்கள் அனுப்பவேண்டிய முகவரி
ஆசிரியர்
**"மாதநிலா"**
இல:172B, மில் வீதி, வவுனியா.
024 222 5799 077 900 9491
email:mathanila@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்தியானந்தாவின் ஆசீர்வாதம்!



சாமியர்களை காலில் விழுந்து கும்பிடும் பெண்களை அந்தச்சாமியார்கள் எங்கே பார்ப்பார்கள் என்பது பற்றி பல வலயமைப்புகளில் பார்த்திருக்கின்றோம். சாமியர்களை பார்க்க சேலை கட்டிக் கொண்டோ அல்லது தாவணி போட்டுக் கொண்டேதான் செல்ல வேண்டும் என்று பல மடங்களில் விதிகள் இருக்கின்றனவாம். சாமியர்களுக்கு பெண்கள் இலவச தரிசனம் காட்டினால் தான் அவர்கள் ஆசீர்வாதமே கொடுப்பார்கள் போல. சரி அது அவர்கள் பாடு, நமக்கென்ன வந்தது. ஒரு படத்தைப் பார்த்தோமா விட்டோமா என்று இருக்க வேண்டும். இதே நித்தியானந்தாவின் ஆசி ஸ்ரைல். என்ன அருமையாக ஆசீர்வாதம் வழங்குகின்றார் என்று பாருங்கள்.



**சொர்க்கம்ன்னா என்ன?**
அமெரிக்கன் சம்பளம், சைனா உணவு,
இங்கிலாந்து வாழ்க்கை, இலங்கை மனைவி


**நரகம்னா என்ன?**
அமெரிக்க மனைவி, சைனா வாழ்க்கை,
இங்கிலாந்து உணவு, இலங்கை சம்பளம்









S.B
KIRUPAS
Whole sales & Retailers School Requisites,
Stationery & Fancy Goods, Photo copy,
Laminating
185, Mannar Road, Vavuniya. Tel: 024 2222763



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பெயர் | :................................................ |
| முகவரி | :................................................ |
| அ.அ.இல | :................................................ |
| தொ.பே.இல | :................................................ |

மாதந்தோறும் எமது சஞ்சிகையை பெற்றுக்கொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு விஜய் அச்சுப் பதிப்பகம் பெருமையுடன் வழங்கும் பரிசுக்குவியல்

2012.08.24ம் திகதிக்கு முன் கிடைக்கும் கூப்பன்களை சேகரித்து குலுக்கல் முறையில் தெரிவுசெய்து மூன்று அதிஷ்டசாலிகளுக்கு சிறந்த பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்

*அனுப்பி வைக்கவேண்டிய முகவரி*

ஆசிரியர்
"மாதநிலா"
172B. மில் வீதி. வவுனியா.

**குலுக்கல் நடைபெறும் இடமும் காலமும்**

விஜய் அச்சுப் பதிப்பகம்-172B, மில் வீதி, வவுனியா.
25.08.2012 மாலை 5.00 மணி

பரிசை பெறுபவர்களின் விபரங்கள் அடுத்த மாத இதழில் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்




**முதலாம் பரிசு:** இல:15, லக்ஸபானா வீதி, மகாறம்பைக்குளம் என்னும் முகவரியைச் சேர்ந்த ம.சந்திரகுமார் என்பவருக்கு எமது பிரதான அனுசரனையாளர் கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளர் அவர்கள் பரிசை வழங்குகின்றார்




**இரண்டாம் பரிசு:** இல:11, லக்ஷபானா மகாறம்பைக்குளம் என்னும் முகவரியைச் சேர்ந்த அ.கோணேஸ்வரன் என்பவருக்கு எமது பிரதான அனுசரனையாளர் கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளர் அவர்கள் பரிசை வழங்குகின்றார்

**மூன்றாம் பரிசு:**
திருப்பழனி முருகன் ஆலயம் - யாத்திரிகர்கள் மலை
சிதம்பரபுரம், வவுனியா.


# ரமேஸ் பன்சி ஹவுஸ்

எண்ணெய், பவுடர், கிறீம் போன்ற குழந்தைகளுக்கான அனைத்து பொருட்களும் மற்றும் அன்பளிப்பு பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், பெண்களுக்கான கிறீம் வகைகள், காலணிகள் சென்ற் வகைகள் மற்றும் அனைத்து விதமான பொருட்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரேஒரு பான்சி கடல்

**கொழும்பிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதால் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவுடன் பொருட்களை வழங்குவதில் பூந்தோட்டத்தில் முதலிடம் பெற்றவர்கள்**

மற்றும் எமது புதிய சேவையாக...

**அனைத்து வித மங்களகரமான நிகழ்வுகளுக்குமான**




**கார் வான்**

போன்றன சிறப்பான விலைக்கழிவுகளுடன் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்



பூந்தோட்டம் சந்தி, வவுனியா. தொ.பே: 0777 892516


## சென்றமாத முதலாம் இடத்தைப் பெற்ற வர்ணம்






சென்ற மாத முதலாம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் தரம் 5Aல் கல்வி கற்கும்
**செல்வி.சு.பபினயா,**
இல:46, 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.

இரண்டாம் இடம்
**இராமச்சந்திரன் குகதர்சன்**
காத்தார் சின்னக்குளம்,
வவுனியா.

மூன்றாம் இடம்
**ல.லாவணன்**
4ம் ஒழுங்கை, சாந்தசோலை வீதி,
பூந்தோட்டம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிர்ப் பாடல்!

இந்தப் பாடல் உங்களுக்கு பிடித்த பாடலாக இருந்தால்
அதற்கான காரணங்களை எங்களுக்கு அனுப்பி வைக்கவும்,
அடுத்த என் உயிர் பாடலில் சேர்த்துக் கொள்வோம்

படம்: நண்பன்
இசை:ஹரிஸ் ஜெயராஜ்
பாடலாசிரியர்: மதன் கார்கி
பாடியவர்கள்: விஜய் பிரகாஷ், சின்மாயி, சுவி

### ஏதோ தன்னாலே உன் மேலே...

ஏதோ தன்னாலே உன் மேலே... காதல் கொண்டேன்
ஏதோ உன்னாலே என் வாழ்வில் அர்த்தம் கண்டேன்...

அஸ்கா அஸ்கா அஸ்கா அஸ்கா
அஸ்கா அஸ்கா அஸ்கா அஸ்கா

அஸ்க் லஸ்கா ஏமோ–ஜ
அஸ்த் அஸ்த் லேபே
அஹாவா போலிங்கோ சிந்தா சிந்தா
இஷ்க் இஷ்க் மைலே–லவ்
இஷ்ட பிரேம பியாரோ பியாரோ
ஒரு காதல் உந்தன் மேலே

ஹூச்க் ஹூச்க்... அஸ்கா அஸ்கா

அத்தனை மொழியிலும் வார்த்தை ஒவ்வொன்று கொய்தேன்
மொத்தமாய் கோர்த்து தான் காதல் செண்டு ஒன்று செய்தேன்

உன்னிடம் நீட்டினேன் காதலை காட்டினேன்...

ஏதோ தன்னாலே உன் மேலே... காதல் கொண்டேனே
ஏதோ உன்னாலே என் வாழ்வில் அர்த்தம் கண்டேனே...

(அஸ்க் லஸ்கா ஏமோ–ஜ.... )

ப்ளூட்டோவில் உனை நான் கூடேற்றுவேன்
விண்மீன்கள் பொறுக்கி சூடேற்றுவேன்
முக்கோணங்கள் படித்தேன்
உன் மூக்கின் மேலே
விட்டம் மட்டம் படித்தேன்
உன் நெஞ்சின் மேலே
மெல்லிடையோடு வளைகோடு நான் ஆய்கிறேன் ஓ...ஓ...

ப்ளாட்டோவின் மகனாய் உன் வேடமா
ஆராய்ச்சி நடத்த நான் கூடமா
காதல் நோயில் விழுந்தாய்
உன் கண்ணில் கண்டேன்
நாளும் உண்ணும் மருந்தாய்
என் முத்தம் தந்தேன்
உன் நெஞ்சில் நாடிமானி வைக்க
காதல் காதல் என்றே கேட்க

(அஸ்க் லஸ்கா ஏமோ–ஜ.... )

தே ஜா வூ கனவில் தீ மூட்டினாய்
ராஜா என் மனதை ஏன் வாட்டினாய்
கப்பம் கேட்டு மிரட்டி நீ வெப்பம் கொண்டாய்
ரத்தம் மொத்தம் கொதிக்க என் பக்கம் வந்தாய்
வெண்ணிலாவாக இதமாக குளிரூட்டவா

கண்ணாடி நிலவாய் கண் கூசினாய்
வெண் வண்ண நிழலை மண் வீசினாய்
புல்லில் பூத்த பனி நீ ஒரு கள்ளம் இல்லை
வைரஸ் இல்லா கணினி உன் உள்ளம் வெள்ளை
நீ கொல்லை மல்லி முல்லை போலே
பிள்ளை மெல்லும் சொல்லைப் போலே

(அஸ்க் லஸ்கா ஏமோ–ஜ.... )

ஓ அத்தனை மொழியிலும் வார்த்தை ஒவ்வொன்று கொய்தேன்

மொத்தமாய் கோர்த்துதான் காதல் செண்டொண்டு செய்தேன்
உன்னிடம் நீட்டினேன் காதலை காட்டினேன்

ஏனோ தன்னாலே உன் மேலே காதல் கொண்டேன்னே
ஏதோ உன்னாலே என் வாழ்வில் அர்த்தம் கண்டேனே

பிரபுதேவா, டான்ஸர், டான்ஸ் மாஸ்டர், நடிகர், இயக்குனர் என
எடுக்கிறார். ஆம், விளம்பர படம் ஒன்றை எடுக்கவிருக்கிறார்.
இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரரான விராட் கோலியை
கிறார்.
பிரபுதேவா தமிழில் இருந்து தற்போது இந்திக்கு போய் இயக்கு
கிய ரவுடி ரத்தோர் வாண்ட் இரண்டு படங்களும் மெகா ஹிட்டான
முதன்முதலாக விளம்பர படம் எடுக்கும் பிரபுதேவா இதுகுறித்து
கதையை சொல்லிவிட வேண்டும் என்பது ஒரு புது அனுபவமாக
இனிமையானமனிதர். இவ்வாறு கூறினார் அவர். பிரபுதேவா த
லகளில் பிசியாக இருக்கிறார். இப்படத்தில் நடிக்க பாலிவுட்டின்

# தேவை என்றால் கவர்ச்சியாகவும் நடிப்பேன்!

கதைக்கு தேவை
கூறியுள்ளார். கா
தமிழில் அறிமுக
படங்களிலும் நடி
தற்போது கதிர்வே
நிலையம் போன்
இதுவரை குடும்ப
வந்தார். தற்போது
நிலையம் படத்தி
ஆபாசமாக வரு
தேவை என்றால்
நிலையம் படத்
நடிப்புத் திறமை
உள்ளது. இந்த
ராசுமதுரவனுக்கு
நடித்துள்ளேன்.
பாடல் காட்சிகள்



-சுனேனா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ை அவதாரங்கள் எடுத்திருக்கிறார். இப்போது புதிதாக மற்றொரு அவதாரம்

வைத்து ஒரு ஆண்களுக்கான புதிய காலணி விளம்பரத்தை இயக்கவிருக்

ராக வெற்றி நடை போட்டுக்கொண்டு இருக்கிறார். இவர் இந்தியில் இயக்
து.
றும்போது, இது என்னுடைய முதல் விளம்பரபடம். ஒரு நிமிடத்திற்குள் ஒரு
ருந்தது. விராட் கோலியுடன் பணிபுரிந்தது ஜாலியாக இருந்தது. அவர் ஒரு
போது இந்தியில் இன்னும் பெயரிடப்படாத படத்தின் முதற்கட்டமாக வேலை-
ரிஷ் மற்றும் ஸ்ருதி ஹாசன் ஒப்பந்தமாகியுள்ளது.



என்றால் கவர்ச்சிக்கு ரெடி என
தலில் விழுந்தேன் படம் மூலம்
ான சுனேனா. மாசிலாமணி, வம்சம் போன்ற
ந்தவர்.
ல், சமர், நீர் பறவை, பாண்டி ஒலிபெருக்கி
படங்களில் நடித்து வருகின்றார்
ாங்காகவும் மாடர்ன் பெண்ணாகவும் நடித்து
. முதல்முறையாக பாண்டி ஒலிபெருக்கி
ட் கவர்ச்சியாக நடிக்கிறார். குளியல் சீன்களிலும்
றார். இதுகுறித்து அவர் கூறுகையில், கதைக்கு
கவர்ச்சிக்கு நான் ரெடி பாண்டி ஒலிபெருக்கி
ல் எனக்கு வலுவான கேரக்டர் அமைந்துள்ளது.
ய வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புக்கள்
த்தில் நடிக்க வாய்ப்பு அளித்த இயக்குனர்
நன்றி. பாடல் காட்சியொன்றில் கவர்ச்சியாக
லேசியாவில் படப்பிடிப்பு நடந்தது.
சிறப்பாக வந்துள்ளன என்றார்.

## அந்தமாதிரி படங்கள் தனுஷுக்கு தான் எனக்கு சரிவராது!



அந்தமாதிரி படங்கள் தனுஷுக்கு தான் சரி. எனக்கு ஒத்துவராது-சிம்பு திடீர் பேட்டி
செல்வராகவன்,பாலா படங்களில் எல்லாம் தனுஷ் தான் நடிப்பார் அது எனக்கு ஒத்துவராது என்று நடிகர் சிம்பு தெரிவித்துள்ளார்.
சிம்புவுக்கு தனுஷை வம்புக்கு இழுக்கவில்லை என்றால் தூக்கம் வராது போலும். அவரது வாலு படத்தில் தனுஷின் பழக்காதவன் படத்தில் வரும் வசனத்தை உல்டாவாக்கி பயன்படுத்தியுள்ளார்.கேட்டால் அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறிவிட்டார். இந்நிலையில் தனுஷ் மீண்டும் வம்புக்கு இழுத்துள்ளார்.
இயக்குனர்கள் செல்வராகவன், பாலா ஆகியோர் படங்களில் நடிக்க விருப்பமில்லையா? என்று கேட்டதற்கு அவர் கூறுகையில், அவர்கள் படங்களில் நடிக்க விருப்பமில்லை, அவர்களின் படங்களில் வரும் கதாபாத்திரங்கள் சீரியசாக இருக்கும். தனுஷ் தான் அந்த மாதிரி கதாபாத்திரங்களில் நடிப்பார் அவர் நடிப்பவர் நான் மக்களை மகிழ்விப்பவன்.
எனக்கு தேசிய விருதோ, ஆஸ்கார் விருதோ வேண்டாம் ரஜினிகாந்த எப்படி தளபதியில் நடித்தாரோ அதே மாதிரி நானும் அந்த மாதிரி படங்களில் நடிப்பதில் ஆட்சேபனையில்லை அதனால் தான் வெற்றி மாறனின் படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளேன். நான் மக்களை மகிழ்விக்கும் மாஸ் படங்களில் நடிப்பதில் ஆர்வமுள்ளவன். என் படம் ஓடும் தியேட்டரில் கைதட்டல், விசில் பறக்க வேண்டும் என்றார்.

## பிரபுதேவாவை விட பெரிய இயக்குநராக நடிகை நயன்தாராவுக்கு விருப்பம்



சினிமாவில் நடன இயக்குநராக அறிமுகமாகி பின்னர் நடிகராகி இப்போது இயக்குநராக மாறியிருக்கும் பிரபுதேவா நடனம் போன்று அவரது மாஜி காதலி நயன்தாரா நடிகை தொடர்ந்து இயக்குநராகும் ஆசையில் இருக்கிறார்.
அதற்கான வேலையை இப்போதே தொடங்கி விட்டார் நயன்தாரா. ஆம்! விஷ்ணுவர்தன் இயக்கத்தில், அஜித், ஆர்யா, டாப்ஸி, ஆகியோருடன் நயனும் நடித்து வருகின்றார்.
இப்படத்தில் ஹீரோயினாக நடிப்பதுடன், உதவி இயக்குநராகவும் பணியாற்றி வருகிறாராம் நயன். ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு முதல் ஆளாக வருவது. படப்பிடிப்பு முடிந்தபின் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு கடைசி ஆளாக போவது, க்ளாப் அடித்து ஷாட் துவக்கி வைப்பது என்று உதவி இயக்குநருக்கான அனைத்து பணிகளையும் நயன் செய்து வருகிறாராம். படம் இயக்குவதை உதவியாளராக இருந்து கற்றுக்கொண்டு பிறகு டைரக்டராக எண்ணியுள்ளார். விரைவில் புதுப்படம் ஒன்றையும் நயன் இயக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. பிரபுதேவாவை விட பெரிய இயக்குநர் ஆக வேண்டும் என்பதே நயனின் ஆசை என்று கொலிவுட் கிசுகிசுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGER® Plus

மேன்மைக்கான தருணம்

## இலகு தவணை மூலம் பொருட்களை பெற்று உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குங்கள்

**SINGER (SRI LANKA) PLC, Singer Plus Show Room, Bazaar Street, Vavuniya. 024 2224421, vavuniya@singersl.com.**

---

Ammu Beauty Care

# Ammu Beauty Care & Academy (PVT) Ltd

**(Professional Hair & Beauty Academy) Reg No: P.V.82184**

**Beautician**
**Mrs.Sumanraj Amutha (B.A)**
Advance Dip.in Beauty & Hair Dressing
Member of Sri Lanka Assosiation
Hair Dresser & Beauticians

Dertificate Courses
Advance Diploma Beauty Culture For 6 Months
Diploma Beauty Culture For 3 Months

**1 month** — 15000.00
- Facial
- Facial treatment
- Cleanup
- Bleaching
- Eyebrow shape
- Waxing
- Pedicure & Menu cure
- Mahindi
- Bridal dressing

**3Month** — 10000.00
- Facial
- Cleanup
- Bleaching
- Eyebrow shape
- Make up
- Hair cut

**2Week** — 8000.00
- Facial
- Bridal dressing
- Bleach
- Cleanup
- Eyebrow shape
- Waxing
- Bridal dressing
- Share wearing

**1Week** — 7000.00
- Facial
- Eyebrow
- Share were
- Self makeup



---

# LEADING

## Crusher Works

Sole Proprietor
**R.Rajendran**





Building Bridge & Road Contractor
Matal Supplier & Transporters

Hiring for exavator, Dozer, Motorgrader, Road Roller, JCB, Tipper & Loader



Tel: & Fax: 024 2222990, 024 4927110
Email: leadingcrusher@yahoo.com #118,Poonthoddam Road, Vavuniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 லண்டன் ஒலிம்பிக் பதக்கங்கள் வடிவமைப்பு

—சுவாரஸ்சியமான தகவல்கள்



லண்டன் ஒலிம்பிக் கோட்டியில் வெற்றிப் பெறுபபவர்களுக்கு வழங்கப்பட உள்ள பதக்கங்களின் வடிவமைப்பு குறித்த சில சுவாரஸ்யமான தகவல்கள் இதோ...

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு பதக்கம் கிடைக்க வேண்டும் என்பது நம் ஒவ்வொருவருக்கும் ஆசை.

இதே போல லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வழங்கப்பட உள்ள பதக்கத்தை கைப்பற்ற உலகம் முழுவதும் இருந்து வீரர்கள், வீராங்கனைகள் லண்டன் நகரில் குவிந்து வருகின்றார்கள். ஆனால் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்பட உள்ள பதக்கங்கள் எப்படி வடிவமைக்கப்படுகிறது என்பது குறித்து பலருக்கும் தெரியாது.

**இது குறித்த சில சுவாரஸ்யமாக தகவல்கள்:**

ஒவ்வொரு ஒலிம்பிக் பதக்கமும் உருவாகும்போது சுமார் 1300 பாரன்ஹீட் வெப்பநிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு 2 மில்லியன் எடையுடன் கூடிய அச்சுவைத்து 15 நிமிடங்கள் அழுத்தம் அளிக்கப்படுகின்றது.

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியின் வெற்றியாளர்களுக்கான பதக்கம் தயாரிப்பில் மொத்தம் 800 பேர் ஈடுபட்டனர்.

இதுவரை வழங்கப்பட்டுள்ள ஒலிம்பிக் பதக்கங்களிலேயே 2012 லண்டன் ஒலிம்பிக்கில் வழங்கப்பட உள்ள பதக்கங்களின் எடை சற்று அதிகமாகவே உள்ளது.

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியின் பதக்கங்களை வடிவமைத்தவர் பிரபல இங்கிலாந்து கலைஞர் டேவிட் வாக்கின்ஸ்

ஒவ்வொரு பதக்கத்திக் உருவாக்கத்திற்கும் சுமார் 10 மணி நேரம் தேவைப்படுகிறது. இதற்காக கொலோசஸ் என்ற பிரத்தியேக அழுத்த முறை பின்பற்றப்படுகிறது.

ஒலிம்பிக் பதக்கத்தின் முன் பக்கத்தில் சிறகுகளுடன் இருக்கும் நபரின் உருவம் கிரேக்க விளையாட்டு கடவுளான "நைக்" கை குறிக்கிறது. இவர் பார்த்தினானில் இருந்து இங்கிலாந்து நகருக்குள் நுழைவது போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒலிம்பிக் தங்கப்பதக்கத்திலும் 1.34 சதவீதம் மட்டுமே தங்கம் இருக்கும். மீதமுள்ள பகுதி தாமிரத்தால் ஆனது. (ஒவ்வொரு தங்கப்பதக்கத்திலும் 6 கிராம் அளவு தங்கம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உத்தரவு)

ஒவ்வொரு ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கமும் 92.5 சதவீதம் வெள்ளியால் செய்யப்பட்டது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக 4700 பதக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

பதக்கம் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட உலோக தாது சர்வதேச தரத்திலானது.. இதற்காக சால்ட் லேக் சிட்டி உத் மற்றும் மங்கோலியா பகுதிகளில் உள்ள சுரங்கங்களில் இருந்து உலோக தாது பெறப்பட்டது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கங்கள், இங்கிலாந்தில் உள்ள வால்ஸ் பகுதியை அடுத்த போன்டைகுலன் என்ற கிராமத்தில் உள்ள தராயல் மின்ட் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான பதக்கங்கள் இவ்வளவு சிறப்பு அம்சங்கள் கொண்டது இலங்கையில் இருந்து செல்லும் வீரர்கள் வீராங்கனைகள் எத்தனை பதக்கங்களை வென்று நாடு திரும்புவார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

---



## கிரிக்கெட் வீரர் மார்க் பவுச்சர் அறுவை சிகிச்சை முடிந்தது பார்வை திரும்ப கிடைக்கும் டாக்டர் நம்பிக்கை.

முன்னாள் தென்ஆப்ரிக்க விக்கெட் கீப்பர் மார்க் பவுச்சரின் இடது கண்ணில் ஏற்பட்ட காயத்திற்கான அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. இதன் மூலம் அவருக்கு மீண்டும் பார்வை கிடைக்கும் என்று டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

முன்னாள் தென் ஆப்பிரிக்க விக்கெட் கீப்பர் மார்க் பவுச்சர் (35) இந்த மாதம் இங்கிலாந்திற்கு சுற்றுபயணம் மேற்கொண்டு ஆடி வரும் தென் ஆப்பிரிக்கா அணியில் இவர் இடம்பெற்றிருந்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டிக்கு முன்னதாக கடந்த 9ம் திகதி கவுண்டி அணியான சோமர்சேட் அணிக்கு எதிராக 2நாள் பயிற்சி ஆட்டத்தில் தென்ஆப்பிரிக்கா கலந்து கொண்டது. இப்போட்டியின் போது தென்ஆபிரிக்கா சுழல்பந்துவீச்சாளர் இப்ராம் தகிர் வீசிய பந்து ஸ்டம்பில் பட்டு போல்டானது. அப்போது ஸ்டம்பின் மீது இருந்த பைல்ஸ் எதிர்பாராதவிதமாக விக்கெட் கீப்பரான மார்க் பவுச்சரின் இடது கண்ணை பதம் பார்த்தது.

இதனால் மார்க் பவுச்சரின் இடது கண்ணில் காயம் ஏற்பட்டது. மேலும் கடும் இரத்த போக்கு ஏற்பட்டதால் பவுச்சருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் பவுச்சரின் இடது கண் பார்வையை இழக்கலாம் என்ற அச்சம் நிலவியது.

மார்க் பவுச்சரின் கண்ணில் ஏற்பட்டுள்ள காயத்திற்காக 3மணி நேர அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. இந்த நிலையில் இங்கிலாந்தில் இருந்து தென் ஆப்பிரிக்காவிற்கு நாடு திரும்பிய பவுச்சருக்கு நேற்று 2வது முறையாக கேப்டவுனில் கண் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சைக்கு பிறகு மார்க் பவுச்சரின் இடது கண் மூலம் மீண்டும் பார்வை கிடைக்கலாம் என்று டாக்டர்கள் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது குறித்த டாக்டர்கள் குழு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது.

மார்க் பவுச்சரின் கண் அறுவை சிகிச்சை 3 மணிநேரம் நடைபெற்றது. அறுவை சிகிச்சையின்போது எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. எதிர்பார்த்தது போல ரத்தபோக்கு அதிகளவில் ஏற்படவில்லை. பவுச்சரின் இடது கண்ணில் இருந்த ரெடினா பாதிக்கப்படாத வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது.

எனவே அவரது இடது கண்ணிற்கு மீண்டும் பார்வை கிடைக்க வாய்ப்புள்ளது. கண்ணில் காயம் ஏற்பட்டதால் கட்டியிருந்த ரத்தம் நீக்கப்பட்டது. வெளிப்புறமாக கண்ணில் எந்த பிரச்சனையும் இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்து!! பெற்றோர்களே! உஷார்!!

மிகவும் ஆபத்து!! பெற்றோர்களே! உஷார்!!
தொலைக்காட்சி குழந்தைகளுக்குப் பெரும் ஆபத்து
பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை அழித்து விடாதீர்கள்!
குழந்தைகளின் எதிர்காலம் மிகவும் முக்கியமானது. அதில் பெற்றோர்களின் பங்கும் கவனிப்பும் மிக மிக முக்கியமானது.
ஆபத்து!! ஆபத்து!! மிகவும் ஆபத்து! உஷார்!!
பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை அழித்துவிடாதீர்கள்!
இரண்டு மூன்று வயதுடைய குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பது மிகவும் ஆபத்தாகும். அந்த வயதில் தான் குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிப்பு அடையும் நாலாபுறமும் பார்க்க வேண்டிய கண்கள் ஒரே இடத்தில் நிலை குத்தி நின்று விடுவது இதற்கு காரணம்

மூளை வளர்ச்சி பாதிக்கப்படுவதால், பள்ளிக்குச் செல்லும்போது பாடத்தில் கவனம் இருப்பதில்லை சிந்தனை ஆற்றல் குறைகிறது. செயலாற்றலும் பாதிக்கப்படுகின்றது. சுறுசுறுப்பாக ஓடி ஆடி விளையாட வேண்டிய வயதில் வயோதிபர்களைப் போல் இயக்கமில்லாமல் இருப்பார்கள்.


ஓடியாடாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளின் உடலில் கொழுப்புச் சத்து சேருகின்றது. இது எதிர்காலத்தில் குழந்தையின் உடல்நலனைப்பாதிக்கும். அதோடு இக்குழந்தைகள் முரட்டுக் குழந்தைகளாகவும் இருப்பார்கள். அமெரிக்காவில் நடந்த ஒரு ஆராட்சியில் இத்தனையும் தெரிய வந்திருக்கிறது

பெற்றோர்களே! உஷார்! பெற்றோர்களே!
இன்று நமது பிள்ளைகளின் நிலையைப் பார்தீர்களா.·.
சதாவும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் தான் உட்கார்ந்திருக்கிறார்கள். சன் டிவியின் சுட்டி போன்ற சனல்கள் வந்த பிறகு பிள்ளைகள் எங்கும் செல்வதில்லை. பக்கத்து வீடுகளுக்கோ, உறவினர் வீடுகளுக்கோ அழைத்தால் கூட போவதில்லை. ஏன் வீட்டை விட்டே வெளியே வருவதில்லை.

**சிலைகளாக**
பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் உடையைக்கூட மாற்றாமல் அதன் முன் சிலைகளாக அமர்ந்துவிடுகின்றார்கள். தேனீர், சாப்பாடு எல்லாம் அதன் முன்னால் தான்.
உட்கார்ந்து அவர்கள் களைத்துக் போய் படுத்துக் கொண்டே தொலைக்காட்சியை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
விளைவு? அவர்களின் உடல் ஆரோக்கியம் குன்றி வலுவிழந்து விடுகிறார்கள்.

கண்பார்வை போய் முதியவர்களை விட கனமான கண் கண்ணாடிகளை அணியவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். நடக்கவும் ஓடவும் செய்யாமல் சற்று தூரத்திற்கு நடப்பதற்கே இயலாது கால் வலிக்கிறது என்று கூறுகிறார்கள். குழந்தைகளின் நிலைமை எங்கோ சென்றுவிட்டது பார்த்தீர்களா?

**குழந்தைகளின் எதிர்காலம்**
இப்படிப்போனால் குழந்தைகளின் எதிர்காலம்



என்னவாகும்? என்று சற்றேனும் சிந்தித்தீர்களா? அவர்களைப்பற்றி நீங்கள் கவலைப்படவில்லையா? உடல் வலுவிழந்து, மூளைத்திறன் குன்றி, சிந்திக்கும் ஆற்றல் இன்றி, செயலாற்றும் அனைத்து அபார ஆற்றல்களையும் இழந்து பரிதவிக்கும் நிலைக்கு படுவேகமாக ஆதாள பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம்.

எதிர்காலத்தில் இவர்களெல்லாம் பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல் போன்ற உயர்தரப்படிப்பிற்குரிய எவ்விதத் தகுதியையும் பெறாது போய்விடுவார்கள். அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகிவிடாது இப்போதே குழந்தைகளைப் பேணி வளர்க்கவேண்டியதும், அதற்கான ஆவணைகள் செய்து அவர்களின் உடலும், உள்ளமும் வலுவும் ஆரோக்கியம் பெற்று கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டு உயர்ந்தோங்குவதற்கும் ஒவ்வொரு பெற்றோரும் விழிப்போடு செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**அலட்சியம் காட்டாதீர்!**
இதிலே அலட்சியம் காட்டும் பெற்றோர் எதிர்காலத்தில் ஒளிவீச வேண்டிய தமது ஆற்றல் மிக்க சந்ததிகளை இப்போதே கண்களைக் கட்டி இருட்டிலே விட்டு அவர்களின் வாழ்வைப் பாழாக்குகிறார்கள், என்பதுதான் பொருள் எனவே!
பெற்றோர்களே! குழந்தைகளை கருத்தூன்றி கண்காணியுங்கள். தொலைக்காட்சிப் பெட்டிகளை சிறிதுமூடிவையுங்கள்.
அவர்களுக்குரிய பயனுள்ள நிகழ்ச்சிகளை குறித்த நேரங்களில் பார்ப்பதற்கு ஆவனை செய்யுங்கள். கண்ட நேரங்களிலெல்லாம் டிவி நிகழ்ச்சிகளையும் தொடர்களையும், சினிமா படங்களையும் நீங்களும் பார்க்காமல். அவர்களுக்காக தியாகம் செய்யுங்கள். அவர்களை தொலை நோக்காக கொண்டே உங்கள் எல்லாச் செயல்களும் அமையவேண்டும். இதுதான் அறிவார்ந்த பெற்றோர்கள் செய்யவேண்டிய கடமை.இதுவே அவர்களுக்கு அழகு.
குழந்தைகளை தூங்கவைப்பதற்கும், உணவூட்டுவதற்கும். நாம் ஓய்வெடுப்பதற்கும் அவர்களை தொலைக்காட்சி முன் உட்கார வைத்து தாலாட்டி விட்டு நீங்கள் ஒதுங்கி விடாதீர்கள். அது அவர்களை பாழாக்கும் செயல் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்ட பலகாரம்
## சுட்டுப்பாருங்கள்

### பருத்தித்துறை வடை

| பொருட்கள் | அளவு |
|---|---|
| தோல் நீக்கிய உழுந்து | 1 கப் |
| வெள்ளை அரிசி மா (வறுத்து அரித்தது) | 1 1/2 கப் |
| சின்ன வெங்காயம் (சிறிதாக வெட்டியது) | 2 மேசைக்கரண்டி |
| கறிவேப்பில்லை (சிறிதாக வெட்டியது) | 1 மேசைக்கரண்டி |
| தேங்காய் எண்ணெய் | 1/2 லீற்றர் |
| மாஜரின் | 50 கிராம் |
| மஞ்சள்தூள் | 1/2 தேக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |
| மிளகாய்த்தூள் | 1 மேசைக்கரண்டி |



செய்முறை:

உழுந்தை 2 1/2 மணி நேரம் நீரில் ஊறவைத்துக் கழுவி நீரை வடித்துக் கொள்ளவும். பின்னர் வடித்துக் கொண்ட உழுந்தை ஒரு பாத்திரத்தில் இட்டு வறுத்தரித்த அரிசி மா, மிளகாய்த்தூள், வெங்காயம், மஞ்சள் தூள், கறிவேப்பிலை, உப்புத் தூள் என்பனவற்றைச் சேர்த்து நன்கு வேகும் வண்ணம் பிசிறிக் கொள்ளவும். பின்னர் நன்கு கொதித்த வெந்நீரை அளவாக விட்டு, மாஜரினையும் சேர்த்து கையில் ஒட்டாத பதத்திற்கு நன்கு குழைத்துக் கொள்ளவும்.

பின்னர் குழைத்த மாக் கலவையைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். பின்பு ஒவ்வொரு உருண்டைகளாக எடுத்து எண்ணெய் தடவிய தட்டில் வைத்து மெல்லியதாக வட்ட வடிவில் தட்டையாகத் தட்டிக் கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டுக்கொதித்ததும் அவற்றை எண்ணெயில் போட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்து ஆறவிட்ட பின் சாப்பிட்டு பாருங்கள் ருசியோ தனி ருசி தான்.

# கணினியும் கண்ணும்

அதிக நேரம் கணினிப்பொறிக்கு முன்னால் கண் விழித்திருப்பவர்களை பல விதமான நோய்கள் பிடிக்கின்றன. அதில் முக்கியமான ஒன்று கண் உலர்தல். இமைக்கக் கூடச் செய்யாமல் கணினியோ கதியெனக் கிடக்கும் மக்களை, இந்த நோயை விரும்பி அழைப்பவர்கள் பட்டியலில், சேர்த்துக் கொள்ளலாம்.

கணினிப்பொறிக்கு முன்னால் அமர்ந்து நீண்ட நேரம் வேலை செய்பவர்களின் கண்கள் அதிக அழுத்தத்தைச் சந்திக்கின்றன. இத்தகைய சூழலில் வேலை செய்யும் கண்களுக்கு டிரை ஐ சிண்ட்ரோம் எனப்படும் கண் உலர்தல் நோய் விரைவிலேயே வந்து விடுகிறது. அதன் விளைவுகளாக கண் எரிச்சல், கண் அரிப்பு, வலி போன்ற இணைப்புக்கள் கூடவே வந்து விடும். என்கின்றனர் மருத்துவர்கள்.


கண்ணில் இருக்கும் ஈரப்பதம் குறைந்து போவது தான் டிரை ஐ சிண்ட்ரோம் அல்லது கண் உலர்தல் நோயின் ஒரு வரி விளக்கம். இது எளிதான நோய் எனக் கருதி விட்டு விட்டால் இரும்பை துரும்பு அரித்து தீர்ப்பது போல இந்த நோய் நிரந்தரமாகவே கண் பார்வையைப் பறித்துக் கொள்ளும் பாயம் உண்டு.

கண் எரிச்சல், கண் அரிப்பு, கண் வலி, கண் சிவத்தல் போன்ற அறிகுறிகள் இருந்தால் உங்களுக்கு இந்த நோய் இருக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எச்சரிக்கையாய் இருத்தல் பெரும் இன்னலைத் தீர்க்கும்.

பெருநகரங்களில் வாழும் மக்கள் தான் இந்த கண் உலர்தல் நோயினால் அதிகம் பாதிப்படைவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். காரணம் அவர்கள் தான் அடிக்கடி கணினியே கதியெனக் கிடக்கின்றார்கள்.

மாதநிலா.com

கணினியில் குளிரூட்டப்பட்ட அறையில் இருக்கும்போது குளிர்காற்று படும் இடத்தில் நேரம் இருப்பது கூட கண் உலர்தலுக்குக் காரணமாகி விடுமாம். கண் உலர்தலிலிருந்து தப்பிக்கும் சுலப வழிகள் கண்ணை அடிக்கடி இமைத்துக் கொண்டே இருப்பதும், தொடர்ந்து கணினியைப் பார்க்காமல் இருப்பதும் தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை மழை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும் நனைந்திடலாம்
கீழ் காணும் முகவரிக்கு சமர்ப்பிக்கவும்

**நட்பே இசையின்
வாழ்வில் ஒரு இன்பம்**

காதல் வலியையும்
வெல்லும் சக்தி
நட்பு கொள்ளும்
இதயத்திற்கு

கண்கள் பார்த்து
கைகள் கோர்த்து
ஒரே நிழலில் நடந்து
சிறுக சிறுக சேமித்த
நம் நட்பை
காலம் என்ன விதி கூட
துரத்திக் கொள்ள இயலாது

வ.கபிலாஜினி
கோம்பாவில் 4ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

**நட்பிற்கு ஒரு சாரல்
என் பேனாவின் துளியில்...**

அன்பின் கபிலாவுக்கு...
இமைகளுக்குள் ஒரு வாழ்க்கை
கனவுகள் நிறைந்த ஒரு உலகம்
கற்பனைக்கும் எட்டாத ஒரு நினைவலை – நான்
நட்பின் சாரலாய் – உன்
மடியில் தத்தி தாவும் ஒரு நிலவு

வாழ்க்கையே ஒரு துன்பம்
வாழ்க்கையின் இப்பிரபஞ்சம் ஒரு இன்பம்
உன் உழைப்பில் தெரியும் உயர்வு!
இவை அனைத்திலும் என் உள்ளத்தை
புரிந்த ஒரு நட்பே!
என்றும் உன்னை காணவே – என்
அன்பை இறைவனுக்கு தந்தேன்
ஒரு சொத்தாக
இறைவன் எனக்கு கொடுத்தான் – உன்னை
ஒரு சொத்தாக

உன் நட்புக்கென நான் வாழ்ந்திடவே
இன்னும் ஒரு தடவை வந்து பிறப்பேன்
இப் பிரபஞ்சத்தில்

த.ராஜி, ஷிவானி
சாந்தசோலை, வவுனியா

## SMS பூக்கள்

நான் நெருப்பு நீ பருப்பு,
நான் ஆகாயம் நீ வெங்காயம்
நான் இரும்பு, நீ துரும்பு,
ரென்சன் வேனாம்
*This is my* குறும்பு

காதல் திருமணத்திற்கும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கும்
என்ன வித்தியாசம் தெரியுமா?
நாமே போய் கிணற்றில் விழுந்தால் Love Marriage
பத்து பேரு சேர்ந்து கிணற்றில் தள்ளி விட்டால்
Arrange Marriage

நகுலேஸ்வரன் அபிராமி
வேல் முருகன் ஜுவலர்ஸ்
87A, கண்டி வீதி, வவுனியா.

## எது உன்னில் அழகு...?

எது உன்னில் அழகு???
விண்மீனாய்
பளிச்சிடும்
உன் அழகிய விழிகளா??

மொட்டு விரிவது
போல் மெல்ல மலரும் உன்
பூ இதழ் புன்னகையா...?
கடல் அலை போல
காற்றோடு அசைந்தாடும்
உன் கார்க் கூந்தலா..?

தேய் பிறை போல்
நெளிந்து வளைந்திருக்கும்
உன் மெல்லிய இடையா...?

வில்லென வளையும் புருவங்களா?
இல்லை அம்பாக மாறி
என்னை தாக்கும் பார்வைகளா..?

மின்சாரம் பாய்கின்ற வார்த்தைகளா?
இல்லை என்ன சொல்லாமல்
கொள்கின்ற மௌனங்களா..?

எது உன்னில் அழகு???
மாட மாளிகை வேண்டாம்..
உன் மண்குடிசை போதும் என
என்னுடன் கைகோர்த்து
வரத் துடிக்கும்
உன் உள்ளம் தான்
பெண்ணே கொள்ளை அழகு...

எஸ்.பிரியன்
ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி

## கல்யாணம் ஒரு தொலைபேசி..

கல்யாணம் என்று அவசரமாய் மணமுடித்து
அஞ்சாறு நாளிலே போய்விட்டான் வெளிநாடு
தற்போது இருவருக்குமிடையில் தாம்பத்யம்
தொலைபேசியில்தான்
உன்ன மனமில்லை சமைப்பது எதற்கு?
அவள் உள் மனம் கேட்கிறது
சும்மா இருந்த சங்கை
ஊதி விட்டான் ஆசாமி
ஐந்து வருடங்கள் காத்திருக்கவேண்டுமாம்
அவள் உணர்வுகள் சந்தோசம் அன்பு
பாசம் எல்லாம் வெறும்
நான்கு சுவர்களிற்குள் நர்த்தனமாடுகிறது

–ஜெ.சுலக்ஷன்
தோணிக்கல், வவுனியா.

## வாழ்க்கை நியதி

மெதுவாக பேசு
மெய்யாகப் பேசு
இனிமையாக பேசு
இணக்கமாக பேசு
அன்பாய் பேசு
அடக்கமாகப் பேசு
சிரித்துப் பேசு
சிந்தித்துப் பேசு
விளக்கமாகப் பேசு
சுருக்கமாகப் பேசு

– சரண்யா நாகேந்திரன்
வவுனியா பூந்தோட்டம்
மகாவித்தியாலயம்

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
**"மாதநிலா"**
இல:172B, மில் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையாக இருக்க ஆசையா?


# அழகு மங்கையர்

குமரியை உண்டால், குமரியை வெல்ல முடியும் என்கிறது சித்த மருத்துவம், குமரி என்பது சோற்றுக்கற்றாழையின் மற்றொரு பெயர்
அலோவேரா சோப்பு, ஷாம்பு.. எல்லாம் சோற்றுக்கற்றாழை மூலம் தான் உற்பத்தி செய்கிறார்கள். தரிசு நிலத்தில் விளையும் இந்த செடிக்கு ஏகப்பட்ட மருத்துவ குணங்கள் உண்டு.
கற்றாழை ஜெல்லை (சோறு) சுத்தமான நீரில் 7 முறை கழுவி சுத்தம் செய்து. தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர உங்கள் இளமை என்றும் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்கும், உடலில் கஸ்தூரி மணம் வீசும், சருமம் வறண்டு போகாமல் ஈரப்பதத்துடன் ஜொலிக்கும், கற்றாழை ஜெல்லை பசு மோரில் கலந்து குடித்து வர உடல் சூட்டினால் முகத்தில் வரும் பருக்கள், வெயிலினால் தோலில் ஏற்படும் அலர்ஜி மற்றும் கருந்திட்டுக்கள் மறைந்து போகும். இதன் ஜெல்லை முகத்தில் தேய்த்துக் கழுவி வந்தால் முகம் அப்பழுக்கில்லாத பளிங்கு போல் ஜொலிக்கும், கற்றாழை மடலைக்கீறி சாறெடுத்து, அதை தேங்காய் எண்ணெயுடன் கலந்து 40 நாள் வெயிலில் வைத்து இதை தலைக்கு தொடர்ந்து தேய்த்து வாருங்கள் தலைமுடி நன்கு செழித்து வளரும்.
என்ன இல்லை சோற்றுக்கற்றாழையில்! சோற்றுக் கற்றாழைக்கு சித்த மருத்துவர்கள் கொடுத்திருக்கும் மதிப்பே தனிதான். மூலிகைகள் உலகத்தில் ராஜ மரியாதையுடன் வலம் வரும் இந்த சோற்றுக்கற்றாழை அதற்கு முற்றிலும் தகுதி உடையதுதான். எளிதாக கிடைக்கக்கூடிய இந்த மூலிகை ஏராளமான மருத்துவக் குணங்களை கொண்டது.
தீய சக்திகள், கண்திருஷ்டி இவைகளை அண்டவிடாது என்ற நம்பிக்கையின் காரணமாக வீட்டின் முன்புறம் வளர்க்கப்படுகின்ற அல்லகட்டித் தொங்க விடப்படுகிற இந்த செடி மாட்டுத் தொழுவங்களில் கால்நடைகளுக்கு உண்ணி பற்றாமலிருப்பதற்காகவும் தொங்கவிடப்படுவது உண்டு.
கற்றாழையை தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊற வைத்துக்குளிக்க தலையில் ஏற்படும் பொடு, சிரங்கு குணமாகும். சோற்றுக்கற்றாழை மடலை இரண்டாகப் பிளந்து உள்ளே சிறிதளவு வெந்தயத்தை வைத்து மூடி விடவும் இரண்டு நாட்கள் கழித்து ஊறிய அந்த வெந்தயத்தை எடுத்து தேங்காய் எண்ணெயில் போட்டு அதை தேய்த்து குளிக்க நரை முடியும் கறுப்பாகும்.
வாடிச் சருகான கற்றாழை மடலை தீயில் கருக்கி, தேங்காய் எண்ணெயோடு கலந்து தீப்புண்களில் மீது பூசி வர விரைவில் புண் ஆறும்.
கற்றாழை மடலில் சிறு துண்டு எடுத்து இரண்டாக பிளந்து சோற்றுப் பகுதியை தீயில் வாட்டி உடல் பொறுக்கும் சூட்டில் அடிபட்ட இடத்தில் இதை வைத்து ஒத்தடம் கொடுக்க வலி, வீக்கம் மட்டுமல்ல இரத்தக் கட்டும் மாறும்.
இச்செடியின் மடலில் உள்ள சோற்றை எடுத்து தண்ணீரில் நன்கு அலசி அதை சாப்பிட்டு வர குடல் புண், மூல நோய் மாறும் மலச் சிக்கல் தீரும்.
மஞ்சள்காமாலை நோய்க்கும் நோற்றுக்கற்றாழை மருந்தாக பயன்படுகிறது. தவிர கூந்தல் தைலம், அழகு சாதகப்பொருள்களில் இது சேர்க்கப்படுவதால் பொருளின் தரமும், விரயமும் மட்டுமல்ல மருத்துவதன்மையும் அதிகரிக்கும்

முட்டையின் வெண்கரு 7 ஸ்பூன், தேன் கால் ஸ்பூன், மாதுளை ஜூஸ் அரை ஸ்பூன் மூன்றையும் கலந்து அரை மணிநேரம் பூசிவிட்டு முகம் கழுவினால், எண்ணெய்ப் பசை நீங்கிவிடும்.

அமர்ந்திருப்பதை குறைத்தால் ஆயுள் அதிகரிக்கும்
-விஞ்ஞானிகள்

## செலவில்லாமல் அழகி ஆகலாம்!




எப்படியாயினும் அழகியாகியே தீருவேன் என்று கங்கனம் கட்டிக்கொண்டு பியூட்டி பார்லருக்கு போய் பணத்தையும், நேரத்தையும் விரயமாக்கிக்கொண்டிருப்பவரா நீங்கள்? உங்களுக்காக நமது வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்தே அழகாக்கும் எளிமையான அழகுக் குறிப்புகள் இதோ.

**முடி**
முடி செழித்து வளர வாரம் ஒரு முறை வெண்ணைய் தலைக்குத் தடவி ஒரு மணிநேரம் கழித்து அலசி வந்தால் முடி நன்றாக வளரும்.

**கண்**
கண்ணைச் சுற்றி கருவளையம் நீங்க வெள்ளரிக்காய் ஜூஸை பஞ்சில் நனைத்து கண்கள் மீது தினமும் போட்டு வரவும்

**உதடு**
உதடு வசீகரமாக இருக்க முட்டையின் வெண்கரு, பாதாம், பால் இம்மூன்றையும் கலந்த உதட்டில் தடவி அது காய்ந்ததும் சுடுநீரில் கழுவி எடுக்க வேண்டும்.

**முகம்**
உருளைக்கிழங்கை இடித்துச் சாறு பிழிந்து, சமமாகத் தேன் கலந்து முகத்தில் தடவ, முகம் அழகுபெறும்
முகச் சுருக்கம் நீங்க
முட்டையின் வெண்கருவைத் தடவுங்கள். சிறிது நேரம் கழித்து முகம் கழுவ முகத்திலுள்ள சுருக்கம் மறையும்.

**கருமை நீக்க**
கருமையடைந்த முகத்திற்கு பாதாம் பருப்பை பாலில் அரைத்து இரவில் முகத்தில் தொடர்ந்து பூசி வர பொலிவு பெறும்.
முகத்தின் எண்ணெய்ப் பசை நீங்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலோ டொக்டர்

## கேள்வி - பதில்

Dr.பத்மநாதன் சத்தியலிங்கம் MD (USSR)
சுகாதார வைத்திய அதிகாரி – வவுனியா.



**கேள்வி:** ஹலோ டொக்டர்! எங்களுக்கு திருமணமாகி 5 வருடங்களாகி விட்டது இதுவரைக்கும் குழந்தைகள் இல்லை. வைத்தியரிடம் சென்று பரிசோதித்த பின் எங்கள் இருவர் மேலும் எந்தக்குறையும் இல்லை என பதிலுரைத்தார் எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லையா?

**கே.வினோத்**
சிதம்பரபுரம், வவுனியா.

**பதில்:** தாங்கள் கூறியதுபோல எந்தக்குறையும் இல்லையென்றால் கட்டாயமாக உங்கள் இருவருக்கும் குழந்தைபாக்கியம் கிடைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் திருமணமாகி 5 வருடங்களாகியும் குழந்தை இல்லை என்பதால் கட்டாயமாக நீங்கள் இருவரும் பொருத்தமான மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து உரிய சிகிச்சை பெற்றால் இந்நவீன மருத்துவ உலகில் உங்கள் குறையைத் தீர்த்துக் கொள்ளலாம். எனவே நீங்கள் இருவரும் மகப்பேறு வைத்திய நிபுணரை சந்தித்து உரிய சிகிச்சையை செய்து கொள்ளவேண்டும்

---

**கேள்வி:** ஹலோ டொக்டர்! எனக்கு வயது 45 சிலநேரங்களில் எனக்கு தலைசுற்றி வியர்த்து மயக்கம் வருவது போல் இருக்கும். சுமார் அரை மணிநேரம் அப்படி இருக்கும் பின்னர் இல்லாமல் போய்விடும். வைத்தியரிடம் சென்று பரிசோதித்த பின்னும் ஒரு பிரச்சனையும் இல்லை என்றார்கள். ஆனாலும் பின் ஒரு தடவை இப்படி நடந்தது. எனக்கு பயமாக இருக்கிறது. எனக்கு நல்ல பதிலை தாருங்கள்.

**எஸ்.அரியமலர்**
பூந்தோட்டம், வவுனியா.

**பதில்:** பொதுவாக தலைசுற்றி வியர்த்து மயக்கம் வருவது சாதாரணம் அல்ல. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். எனவே நீங்கள் உடனடியாக ஒரு தகுதிவாய்ந்த வைத்தியரை நாடி உரிய பரிசோதனைகளை செய்து சிகிச்சை பெறுவது சிறந்தது.

---

**கேள்வி:** ஹலோ டொக்டர் வணக்கம்! என்னுடைய கேள்வி என் தனிப்பட்ட பிரச்சினை இல்லை பொதுப்பிரச்சினை. டெங்கு நோயை முற்றுமுழுதாக எப்போதுமே இல்லாதொழிக்க முடியாதா? அப்படியானால் அதற்காக நாங்களும் நீங்களும் என்ன செய்யவேண்டும்?

**கஜன்**
2ம் குறுக்குத் தெரு, வவுனியா.

**பதில்:** டெங்கு நோய் என்பது வெறுமனே ஓர் சுகாதாரப் பிரச்சினை அல்ல இது சூழல் சம்பந்தப்பட்ட, மக்களின் நடத்தை சம்பந்தப்பட்ட பிரச்சினையும் கூட. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பொதுவாக மனிதனால் உருவாக்கப்படும் நுளம்பு பெருகக் கூடிய கழிவுப் பொருட்களிலும் சில இயற்கையான நீர் தேங்கும் இடங்களிலும் தனது இனத்தைப் பெருக்குகின்றன. எனவே டெங்கு நோயை முற்றாக ஒழிக்க அல்லது கட்டுப்படுத்த எம் அனைவரதும் மனங்களில் மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது எமது கழிவுப்பொருட்களை சமூகப்பொறுப்புடன் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யவேண்டும்.
அதாவது நாம் ஒவ்வொருவரும் சமூக பொறுப்புடையவர்களாக எமது எதிர்கால சந்ததியில் அக்கறை உடையவர்களாக எம்மில் மாற்றத்தை ஏற்படுத்தினால் எங்களால் இலகுவாக கொடிய டெங்கு நோயை கட்டுப்படுத்தலாம்.

---

**கேள்வி:** ஹலோ டொக்டர்! என் பெயரை சொல்ல விரும்பவில்லை. நான் ஒரு ஆண். வயது 19. என் பின்னால் இடுப்புக்கு கீழ் ஒரு கட்டி வளர்ந்து வருகின்றது. சிலநேரங்களில் சைக்கிள் கூட ஓட கஸ்ரமாகி இருக்கும். வைத்தியரிடம் சென்று காட்டுவோம் என்றால் வெட்கமாக உள்ளது. ஏதாவது குளிசைகள், மருந்துகள் இருந்தால் குறிப்பிட்டு தாருங்கள்.

**பெயர் குறிப்பிட விரும்பவில்லை**
திருநாவற்குளம்

**பதில்:** தங்களது பிரச்சனை எவருக்கும் வரக்கூடியது எனவே இங்கு வெட்கப்படுவதற்கு காரணம் இல்லை. நீங்கள் நன்றாக அறிந்த ஒரு வைத்தியரிடம் சென்று அல்லது சத்திரசிகிச்சை நிபுணரை நாடி உங்களது பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

---

**கேள்வி:** ஹலோ டொக்டர்! வணக்கம். நான் ஒரு ஆண். திருமணத்திற்கு பெண் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். என்னுடைய உயரமோ 4 அடி 6 அங்குலம் தான் எனக்கு பயமாக இருக்கிறது. தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்குமா? என்னுடை மனைவியை திருப்திபடுத்த என்னால் முடியுமா?

**பெயர் குறிப்பிட விரும்பவில்லை**
கற்குளம் I

**பதில்:** பொதுவாக தாம்பத்திய வாழ்க்கைக்கும் உயரத்திற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக அறிய முடியவில்லை. தாம்பத்திய வாழ்வு கணவரின் மனைவிக்கிடையே இருக்கும் பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் சிறந்த உறவில்தான் தங்கி உள்ளது. எனினும் தங்களிற்கு ஏதாவது சந்தேகம் இனியும் இருந்தால் ஓர் தகுதிவாய்ந்த வைத்தியரை நாடவும்.

**எமது அடுத்த செப்டெம்பர் மாத இதழில் உள உடல்நலம் மற்றும் மனநோய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு தருவதற்கு சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர் பதிலளிப்பார்.**

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
**“மாதநிலா”**
இல:172B, மில் வீதி, வவுனியா.
024 222 5799 077 900 9491
email:mathanila@yahoo.com

மருத்துவம் தொடர்பான அனைத்து சந்தேகங்களையும் தபால் மூலம் எமக்கு எழுதி அவற்றை தீர்த்துக்கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ... நம்பத்தான் வேண்டும்



# பேய்க்கு

## யாரையெல்லாம் பிடிக்கும் தெரியுமா?

தினமும் குளிக்காமல் இருக்கும் பெண்களையும், கைகளிலும், விரல்களிலும் மருதாணி இடாதவர்களையும், அடிக்கடி தலையை விரித்துப்போட்டு இருப்பவர்களையும் பேய் பிடிக்கும், பெண்களின் விரல் நுனி, தொப்புள், வழியாக பேய் மற்றும் மோகினி, பெண்களின் உடலுக்குள் புகும். எனவே தினமும் குளிக்க வேண்டும். மஞ்சள் பூசியும், மருதாணி அரைத்து கைவிரல்களில் பூசியும் வந்தால் நிம்மதியாக வாழ முடியும்.

மஞ்சளும் மருதாணியும் தீய சக்தியை அழிக்கும் சக்தி வாய்ந்தவை, நகங்களை வெட்டாமல் கூரிய நகங்களுடன், அழுக்குடன் இருப்பவர்களை பேய் பிடிக்கும், தூய ஆடைகளை அணியாமல் அழுக்குடன் இருப்பவர்களையெல்லாம் பேய் அல்லது மோகினி எனப்படும் சூட்சுமம் தீய சக்தி பிடிக்கும் என சான்றோர் கூறுகின்றனர்.



## நம் நாட்டு சாதனையாளர்

மன்னார், பெரியமடுவை சேர்ந்த இளைஞர் ஒருவரால் தொலைதூரத்திலிருந்து வீட்டிலுள்ள உபகரணங்கள் கட்டுப்படுத்தக்கூடிய தன்னியங்கி இலத்திரனியல் சுற்றொன்றை கண்டுபிடித்துள்ளார்.

வவுனியா காளிகோயில் வீதியில் அமைந்துள்ள SUNTEC (Sun Technical Engineering College) நடத்தி வருபவருமான மென்பொருள் பொறியியலாளருமான தங்கராஜா ஷத்விதன் என்பவரே கண்டுபிடித்துள்ளார்



ஜூலை மாத உங்களுக்குத் தெரியுமா? கேள்வியின் சரியான பதில்
**செல்வி.நிரஞ்சலா, சிதம்பரபுரம், வவுனியா**

நாங்கள் இறங்காமல் அந்த பஸ்ஸிலேயே சென்றிருந்தால் பஸ் அந்த இடத்தை கடந்த பின்னே அந்த பாறை விழுந்திருக்கும் அதனால் அனைவருமே தப்பியிருப்பார்கள் என கூறியிருப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் வந்தால் வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும் – விஞ்ஞான உண்மை

லட்சம் பூக்கள் பூத்ததைப்போல உணர்வுகள் தோன்றுகிறதா? வயிற்றுக்குள் வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கிறதா? அப்படின்னா, வடிவேலு சொல்லுறதைப் போல, உங்களுக்கும் லவ் மூடு ஸ்டார்ட் ஆயிடுச்சி என்கின்றனர் விஞ்ஞானிகள். காதல் என்பது காதலர்களுக்கு பலதரப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தினாலும் காதல் உணர்வுகளை வலி நிவாரணியைப் போல வேலை செய்யும் என்றும், போதைப் பொருளுக்கு சமமானது என்றும் விஞ்ஞானிகள் ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளனர்.

**காதல் நிவாரணி**

கால் உணர்வுகள் மனத்திற்கான மகிழ்ச்சியைத் தருவதோடு உடல் வலிகளை நீக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் காதல் வயப்பட்ட 15 இளம் ஜோடிகளை வைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அவர்கள் விரும்பும் நபர்களின் புகைப்படத்தை கொடுத்து அவர்க ளின் உணர்வு களை கணினியி ல் அளவெத்த னர். அப்பொழுது அவர்களின் கைகளில் சிறிதளவு வலிநிவாரணி உட்கொண்ட உணர்வுகள் வெளிப்பட்டது. அதே நேரத்தில் அவர்களின் மூளையையும் ஸ்கேன் செய்யப்பட்டது. அப்போது காதல் உணர்வுகள் முழுவதும் மூளையில் நிரம்பியிருந்தனர். எனவே காதலிக்கும் நபரின் போட்டோவை பார்த்தாலே வலி நிவாரணி உட்கொண்ட உணர்வு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. அந்த அளவிற்கு காதல் சக்தி வாய்ந்தது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

**காதலில் விழுவது இதயமா? மூளையா?**

**கொக்கேய்ன் போதை**

காதலில் விழுந்தவன் போதையில் மிதப்பவனைப்போல உலக



விசயங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருப்பான் என்பார்கள் கவிஞர்கள். அதே கருத்தை இப்பொழுது விஞ்ஞானிகளும் ஒத்துக்கொண்டுள்ளனர். காதல் வயப்பட்டவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள், கொக்கேயன் என்ற போதைப் பொருளை உட்கொண்டால் ஏற்படும் பாதிப்பிற்கு சமமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக கண்டறிந்த னர். நியூயார்க் சிராகஸ் பல்கலைக்கழக பேராசிரியரும் தலைமை ஆய்வாளருமான பேராசியரியர் ஆர்டிக்கும் அவரின் குழுவினரும் , மேற்கு வெர்ஜீனியா பல்கலைக்கழகம், மற்றும் சுவிட்ஸர்லாந்திலுள்ள பல்கலைக்கழக மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்களுடன் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

**பார்த்த முதல் நாளில்**

கண்டதும் காதல் என்பது சாத்தியம் என்று இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். முதன் முதலாக ஒருவரை கண்டவுடன் இவர் நமக்குரியவர்தான் என்பதை உணர்த்தும் வகையில் மூளையின் 12 இடங்களில் தூண்டல் நடைபெறுகிறதாம். அப்போது திடிரென சிறப்பாக உணரச்செய்யும் டோபைன், ஆக்ஸிடோஸின், அட்ரனலின் போன்ற இரசாயனங்கள் உடலில் சுரக்கின்றன என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கொகேயின் போதைப் பொருளை உட்கொண்டாலும் இந்த இரசாயனங்கள் தூண்டப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் மூலம் காதலுக்கு விஞ்ஞான அடிப்படை உள்ளது என்பது உறுதிப்படுத்துகின்றன என்கிறார் ஸ்டெபானி ஆர்டிக் இக்கண்டுபிடிப்புக்களின் மூலம் நரம்பியல் விஞ்ஞானத்திலும் உளவியல் மருத்துவத்திலும் மிகப்பெரிய மாற்றங்கள் என ஸ்டெபானி ஆர்டிக் கூறியுள்ளார்.

**மூளையா? இதயமா?**

காதலில் விழுவது இதயமா அல்லது மூளையா என்ற பெரிய கேள்விக்கு பதிலளித்த விஞ்ஞானிகள், காதல் உணர்வு ஏற்படுவது மூளையில்தான் என்கின்றனர். இருப்பினும் இதயத்திற்கும் தொடர்புள்ளது. உதாரணமாக, மூளையின் சில பகுதிகள் செயற்படும்போது இதயத்தில் தூண்டுதல்கள் ஏற்பட முடியும். வயிற்றில் வண்ணத்துப்பூச்சி பறக்கும் என்கிறார் பேராசிரியர் ஆர்டிக். என்ன உங்களுக்குள் பட்டர்பிளைஸ் பறக்க ஆரம்பிச்சிடுச்சா?

## காதல் தான் கண்டுபிடித்தது

இயந்திர சாதனம் ஒவ்வொன்றிற்கும் வரலாறு உண்டு. ஏ.ரி.எம். (Automatic Teller Machine) உருவான கதை சுவாரஷ்யமானது.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பர்ட் பேரோன் தன் மனைவிக்குப் பரிசளிக்க விரும்பி பணத்தை எடுக்க வங்கியில் வரிசையில் நின்றார். தனது முறை வந்தபோது பணத்தை கொடுக்க வேண்டிய காசாளர் நேரம் முடிந்து விட்டது என்று பூட்டிவிட்டுச் சென்றுவிட்டார்.

ஜோன் வெறுங்கையோடு மனைவியைப் பார்க்க விரும்பவில்லை. கையில் இருந்த சொற்ப சில்லறையை வைத்து கொஞ்சம் கொஞ்சம் சொக்லட்களை வாங்கிக் கொடுத்து மனைவியை சமாதானப்படுத்தலாம் என்று நினைத்து சொக்லெட் வெண்டிங் இயந்திரத்தைத் தேடி சென்றார். அப்போதைக்கு அவர் மனைவியை சமாதானப்படுத்தினாலும், பூட்டிய வங்கிக் கவுண்டரும், காசு போட்டால் உதிர்ந்த சொக்லேட்களும் அவர் மனதில் மீண்டும் மீண்டும் வந்துபோயின. அதன் விளைவுதான் முதல் ஏ.ரி.எம் உருவாகிவிட்டது.

1969இல் இவர் உருவாக்கிய முதல் ஏ.ரி.எம் வடக்கு லண்டனின் பார்க்லேஸ் வங்கியில் வைக்கப்பட்டது. அதிலும் ஒரு சிக்கல் ஜோனின் மனைவியால் அப்போதைய ஏ.ரி.எம் அட்டைக்கான ஆறு இலக்க குறியீட்டை (Pin Number) ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. உடனே செயலில் இறங்கிய ஜோன், அதை நான்கு இலக்கங்களாக குறைத்தார். ஏ.ரி.எம் தற்போது ஏராளமான மாற்றங்களைக் கண்டு விட்டாலும், அதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது ஜோனின் காதல்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஞ்ஞான டிப்ஸ்**

தினமும் 30நிமிடம் உடற்பயிற்ச்சி செய்ய வேண்டும். தற்பூசணி அதிக இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி இரத்த ஓட்டத்தை சீராக வைக்கிறது. இதன் மூலம் மாரடைப்பு, ஸ்டிரோது ஏற்பட மிக முக்கிய காரனமான அதிக இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படுகின்து.


## வேலைக்கு ஆட்கள் தேவை

தற்பொழுது விறுவிறுப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் "மாதநிலா" சஞ்சிகைக்கு

***Photoshop, PageMaker, Coral draw*** வில் நன்கு வேலைசெய்யத் தெரிந்த ஒருவர் தேவை

தொடர்புகளுக்கு
077 900 94 91

**காணி ஒன்றை விற்பனை செய்வதற்கு துணை முகவர்கள் தேவை**

தொடர்புகட்கு
0770584658 0750445070

விற்பனை பிரதிநிதிகளுக்கு...

## மாத வருமானம் 40,000/- க்கு மேல்...

நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்

**முதலில் வரும் இரண்டு பேருக்கும் மட்டுமே இந்த வாய்ப்பு!**

**சந்தர்ப்பத்தை நாங்கள் தருகின்றோம் சம்பாதிப்பதற்கு நீங்கள் தயாரா?**

ஆம் என்றால்

**உடன் நேரில் வரவும்**

**விஜய் அச்சுப் பதிப்பகம்**
**172 மில் வீதி, வவுனியா.**


## Job Bank

வேலைவாய்ப்பு தருணர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

- க.பொ.த சாதாரணம் படித்த பெண் ஒருவர் புத்தகக் கடை ஒன்றில் வேலையை எதிர்பார்க்கின்றார்.
- வவுனியாவில் பிரபல்யம் வாய்ந்த சுவர்க்கா ஹோட்டலில் இருபாலாருக்குமான வேலைவாய்ப்புக்கள் உள்ளன. விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.
- வவுனியா முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பொன் வீடியோ புகைப்படக் கலையகத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன. சம்பளம் பேசித்தீர்மாணிக்கப்படும்.
  Album Designer, Cashier, Video Editor, மற்றும் மேற்பார்வையாளர். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: 024 2222191
- பூந்தோட்டத்தில் உள்ள கிரஸர் ஒன்றிற்கு ஆங்கிலத்தில் கதைக்க, எழுத, வாசிக்கத் தெரிந்த ஒருவர் தேவை. 50 வயதிற்கு உட்பட்ட ஆண். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 024 2222990, 024 4927110
- வவுனியா சூசைப்பிள்ளையார் குள வீதியில் அமைந்துள்ள வாகன உதிரிப்பாக ஸ்தாபனத்திற்கு பெண் கணக்காளர் தேவை. தொடர்புகளுக்கு: 0777 234799
- வவுனியா ஹொரொவபொதான வீதியில் அமைந்துள்ள பஷன் கேட் (Fashion Gate) புடவை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.


### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

தற்போது வெளிவந்திருக்கும் "மாதநிலா" சஞ்சிகையை விற்பனை செய்வதற்கு பகுதிநேர விற்பனை பிரதிநிதிகள் தேவைப்படுகின்றார்கள். சம்பளம் ஒரு நாளுக்கு 2500/- மேல்...

**ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

"மாதநிலா" சஞ்சிகைக்காக முழுநேரப் பணிக்கு ஆண் ஒருவர் தேவை

மேலதிக விபரங்களுக்கு: 077 900 94 91




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஆவணி மாதம் நடைபெற உள்ள தாய்சேய் நல சிகிச்சை தொடர்பான விபரம்

| திகதி | கிழமை | இடம் |
|---|---|---|
| 02.08.2012 | வியாழன் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் மூன்றுமுறிப்பு<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் கூமாங்குளம் |
| 03.08.2012 | வெள்ளி | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் கணேசபுரம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் வைரவபுளியங்குளம் |
| 04.08.2012 | சனி | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சு.வை. அதிகாரி அலுவலகம், வவுனியா |
| 06.08.2012 | திங்கள் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சிவபுரம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் நெளுக்குளம் |
| 07.08.2012 | செவ்வாய் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் தாண்டிக்குளம்<br>குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் ஈச்சங்குளம் |
| 08.08.2012 | புதன் | கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம் பட்டாணிச்சூர்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் பாலமோட்டை |
| 09.08.2012 | வியாழன் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சாஸ்திரிகூழாங்குளம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் கல்மடு |
| 10.08.2012 | வெள்ளி | குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் பட்டாணிச்சூர் |
| 11.08.2012 | சனி | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சு.வை.அதிகாரி அலுவலகம், வவுனியா<br>தாய சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் பாலமோட்டை |
| 13.08.2012 | திங்கள் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் கோயில்குளம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சமணங்குளம் |
| 14.08.2012 | செவ்வாய் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் செக்கட்டிப்புலவு<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் ஓமந்தை<br>குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் தோணிக்கல் |
| 15.08.2012 | புதன் | கற்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம் தோணிக்கல்<br>குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் இறம்பைக்குளம்<br>சுகவனிதையர் சிகிச்சை நிலையம் சமணங்குளம்<br>கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம் மகாறம்பைக்குளம் |
| 16.08.2012 | வியாழன் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் பண்டாரிக்குளம்<br>குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் மகாறம்பைக்குளம் |
| 18.08.2012 | சனி | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சு.வை.அதிகாரி அலுவலகம், வவுனியா |
| 20.08.2012 | திங்கள் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் இராஜேந்திரங்குளம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் தவசிகுளம்<br>குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் வவுனியாநகரம் |
| 23.08.2012 | வியாழன் | கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம் ஈச்சங்குளம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் பூவரசங்குளம்<br>தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சேமமடு |
| 25.08.2012 | சனி | தாய் சேய் குடமபத்திட்ட சிகிச்சை நிலையம் சு.வை. அதிகாரி அலுவலகம், வவுனியா<br>சுகவனிதையர் சிகிச்சை நிலையம் ஈச்சங்குளம் |
| 27.08.2012 | திங்கள் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் சாந்தசோலை |
| 28.08.2012 | செவ்வாய் | தாய் சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் பூந்தோட்டம் |

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி–வவுனியா

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய திருடன்

–சிறுகதை



பணக்காரர்களைக் கொள்ளை அடித்து ஏழைகளுக்கு உதவி புரிந்த ராபின்ஹீட் என்ற கதாநாயகனைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். கேரள மாநிலத்தில் அதே போன்ற ஓர் அதிசயத் திருடன் நிஜமாகவே இருந்ததுண்டு கொச்சுண்ணி என்ற பெயர் கொண்ட அந்தத் திருடன் ஏழைகளை வஞ்சித்து பணம் பறிக்கும் செல்வந்தர்களைக் கொள்ளையடித்து வந்தான். இதனால் ஏழைகள் அவன் பெயரான காயம் குளம் கொச்சுண்ணி என்பதைக் கேட்டவுடனேயே பணக்காரர்களுக்கு குலைநடுக்கம் ஏற்பட்டது.

காயங்குளம் என்ற ஊரில் ஏழைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒரு ஜமீன்தார் இருந்தார். தங்க நகை முதலிய ஆபரணங்களை அடமானமாகப் பெற்றுக் கொண்டு மிக அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பது அவர் வழக்கமாகஇருந்தது. பெரும்பாலானவர்கள் அசலை குறித்த தவணையில் செலுத்த முடியாது தவிக்கையில் அவர்களது அடமானப் பொருட்களை ஜமீன்தார் தன்னுடையதாக்கிக் கொள்வார். இவ்வாறு சேர்த்த செல்வத்தினால் அவர் பெரிய மாளிகையே கட்டி விட்டார்.

அந்த மாளிகையில் இரட்டைச் சுவர்களை அமைத்து தன இருப்பிடத்தை உறுதியாகவும் பத்திரமானதாகவும் ரகசிய அறைகள் அடங்கிய தாகவும் ஏற்படுத்திக் கொண்டார். இவ்வளவு பந்தோஸ்து எதற்கு என்று நண்பர்கள் யாராவது கேட்டால்" கொச்சுண்ணி திருட முயச்சித்தால் என்னிடமுள்ள அடமான பெருட்களை நான் எப்படி பத்திரமாக பாதுகாக்க முடியும். ஆகவே தான் என் வீட்டை ஒரு மர்மக் கோட்டை ஆக்கிவிட்டேன். இப்போது பத்து கொச்சுண்ணிகள் வந்தாலும் திருட முடியாது" என்று பெருமை பேசினார்.

அவரது இந்த வாய் சாவல் கொச்சுண்ணியின் செவிகளை எட்டியது. ஜமீன்தாருக்கு ஒரு பாடம் கற்பிக்க முடிவு செய்த கொச்சுண்ணி ஒருநாள் நேராக ஜமீன்தாரரை சந்தித்து பணம் கடன் கேட்டான்.அவர் தராவிட்டால் அவரது வீட்டில் புகுந்து திருடலாம் என்று எண்ணினான். ஆனால் ஜமீன்தார் உடனே கடன் கொடுத்து விட்டார். கொச்சுண்ணியால் தன் வீட்டில் திருட முடியாது என்று சவால் விட்ட ஜமீன்தாரை இப்போது வேறு வழியில் கொச்சுண்ணி மடக்க எண்ணினான்.

கிருஸ்ணன் நாயர் என்பவன் தனது நகைகளை ஒரு முறை ஜமீன்தாரிடம் அடகு வைத்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினான். இதை அறிந்த கொச்சுண்ணி ஒரு நாள் இரவு ஜமீன்தாரின் வீட்டை அடைந்தான். ஜமீன்தாரின் தினசரி நடவடிக்கைகளை நன்கு அறிந்திருந்த கொச்சுண்ணிக்கு முன் இரவு நேரத்தில் ஜமீன்தாரது மனைவியை அழைத்து , "கிருஷ்ணன் நாயர் வந்திருக்கிறான். அவனிடம் மிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அவன் அடகு வைத்திருந்த நகையை திருப்பிக் கொடு" என்று ஜமீன்தாருடைய குரலில் பேசினான். தன் கணவர் தோட்டத்திலிருந்தபடியே பேசுகிறார் என்று நம்பிவிட்ட ஜமீன்தார் மனைவி அடகு நகைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அங்கு நின்றிருந்த கொச்சுண்ணியின் கையிலிருந்து பணப்பையைப் பெற்றுக் கொண்டு நகைகளைக் கொடுத்து விட்டான். இது குளித்துக் கொண்டிருந்த ஜமீன்தாருக்குத் தெரியாது. சில நாள்கள்கழிந்தது கிருஸ்ண நாயர் ஜமீன்தாரிடம் வந்து தான் வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்து அடகு வைத்த நகைகளை கேட்டான். பணத்தை



பெற்றுக்கொண்டு உள்ளே நகைகளைத் தேடிய ஜமீன்தாருக்கு அவற்றைக் காணாததால் அதிர்ச்சி ஏற்பட்டது. உடனே தன் மனைவியைக் கூப்பிட்டு விசாரித்தார். அவள் "உங்களுக்கு மறந்து விட்டதா? நீங்கள்தானே சில நாட்களுக்கு முன் கிருஷ்ணன் நாயர் வந்திருந்த போது அவருடைய பணத்தைப் பெற்றுக் கொண்டு நகைகளைத் திருப்பிக் கொடுக்கச் சொன்னீர்கள்!" என்றாள்.

"அப்படியா ஈ அந்தப் பணம் எங்கே ?" என்று கேட்டார். அவளுக்கு கொச்சுண்ணி தந்த சிவப்பு நிற பணப்பையைக் கொண்டு வந்தாள்.அதைத் திறந்து பார்த்தாள் உள்ளே பணமே இல்லை.

பெருத்த அதிர்ச்சியுற்ற ஜெமீன்தார் கிருஸ்ணன் நாயருடன் நிலமையை விளக்கி தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார். நகைகளுக்கு பதிலாக அதற்கு சமமான மதிப்புள்ள பணம் கொடுத்து அவனை அனுப்பினார்.

ஜமீன்தாரும் அவரது மனைவியும் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர். ஜமீன்தார் தன் மனைவியிடம் அன்று வந்த ஆள் எப்படி இருந்தான்? என்று கேட்க நான் உன்னிப்பாக கவனிக்கவில்லை நீங்களே கொடுக்கசொன்னதால்தான் வந்திருப்பது கிருஸ்ணன் நாயர் என்று நினைத்தேன் என்றாள்.

"ஆக இது கொச்சுகண்ணியின் வேலையா" என்ற என்னம் தோன்றவே ஜமீன்தாருக்கு அதிர்ச்சியுடன் பயமும் ஏற்பட்டது. தன்னுடைய குரலில் பேசி தன் மணைவியையே ஏமாற்றி விட்டானே இன்னும் என்னவெல்லாம் செய்வானோ என்ற பயம் வந்தது.

இப்படி சோகக்கடலில் மூழ்கியிருந்த இருவரையும் நோக்கி சிலமணி நேரங்களில் கொச்சுண்ணியே வந்தான் என்றான் அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? செய்வதையும் செய்து விட்டு ஒன்றும் அறியாதவன் போல், "ஏன்இப்படி இருவரும் கவலையாக இருக்கின்றீர்கள்?"என்றான் கொச்சுண்ணி ஜமீன்தாரால் பேச முடியவில்லை அவர் மனைவி நடந்ததை சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்டு கடகடவென சிரித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சுக்கண்ணி ஒரு பையை நீட்டி "இதோ அந்த நகைகள் சரியாக இருக்கின்றதா என்று பாருங்கள்" என்றானே பார்க்கலாம் பிறகு தொடர்ந்து கருஸ்ணன் நாயரை கூப்பிட்டு அவனுக்கு நகைகளை கொடுத்து விட்டு உங்கள் பணத்தை பெற்று கொள்ளுங்கள். என்னமோ, பத்து கொச்சுண்ணி கள்வந்தாலும் உங்கள் வீட்டில் திருடமுடியாது என்று சவால் அடிக்காதீர்கள் அல்லவா? அதற்காகவே இப்படி செய்தேன் என்று கொச்சுண்ணி பதில் கூறினான்.

இன் நிகழ்ச்சிக்கு பின் ஜமீன்தார் நல்லவர் ஆக திருந்திவிட்டார் என்று கொச்சுண்ணி கேள்விப்பட்டிருந்தான். ஆகவே அதன் பிறகு கொச்சுண்ணி ஜமீன்தாருக்கு இடைஞ்சல் எதுவும் செய்யவில்லை.

அந்த ஊரில் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த ஒரு கொப்பரி வியாபாரி இருந்தான். அவன் வியாபாரம் சரிவரவில்லை அடிக்கடி அதிக வட்டிக்கு பணம் வாங்கி ஏகப்பட்ட சிக்கலில் மூழ்கியிருந்தான். இவ்வாறு வியாபரத்தில் தத்தளித்துக் கொண்டு இருந்த போதும் என்றாவது நல்லகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கையில் நாட்களை ஓட்டி வந்தான்.

ஒருநாள் அவன் கொப்பறை தேங்காய்களை ஆலப்புழைக்கு சென்று விற்றுவிட்டு எதிர்பார்த்த விலையில் விற்பனை ஆகவில்லை என்பதனால் வருத்தத்துடன் தனது ஊர் நோக்கி செல்லும் படகில் அமர்ந்திருந்தான் . திடீரென அவர்கள் பின்பக்கத்திலிருந்து ஒரு விசைப்படகு வேகமாக வந்தது. அதிலிருந்து ஒருவன், வியாபாரி சென்று கொண்டிருந்த படகுக்குத் தாவியேறினான். அது கொச்சுண்ணி என்று அறிந்தவுடன் வியாபாரி பயந்து நடுங்கினான்.

கொச்சுண்ணி வியாபாரியை யாரென்று கேட்டான். வியாபாரி," நான் கொப்பரை தேங்காய் விற்பவன் . ஆலப்புலையிலிருந்து திரும்பி வருகிறேன்" என்றான்.

தேங்காய் வியாபாரியே நீ? அப்படியானால் உன்னிடம் அதிகப் பணம் இருக்கும். அதைஇப்போதே என்னிடம் கொடுத்து விடு" என்று கொச்சுண்ணி கட்டளையிட்டான்.

"ஐயா நான் ஒரு ஏழை வியாபாரி என்னை விட்டு விடுங்கள் என்று வியாபாரி கெஞ்சினான் " நான் யார் தெரியுமா? நான்தான் கொச்சுண்ணி .நான் சொல்கிறபடி செய்" என்று



கொச்சுண்ணி அதிகாரம் செய்தான். வேறு வழியின்றி தன்னிடமுள்ள பணம் இருநூற்று ஐம்பது ரூபாவை வியாபாரி கொச்சுண்ணியிடம் தந்து விட்டான் . கொச்சுண்ணி மீண்டும் தன் படகில் ஏறிச் சென்று விட்டான்.

வீட்டுக்கு வந்த தும் வியாபாரி தன் மனைவியிடம் சொல்ல அவள் மனம் உடைந்து அழுதாள். "இப்போது பணத்துக்கு என்ன செய்வது? நமது வீட்டை விற்று விடலாம் அதில் கிடைக்கும் பணத்தில் மீண்டும் வியாபாரம் செய்யலாமா என்று மனைவி கேட்க வியாபாரிக்கும் அதை தவிர வேறு வழி தெரியவில்லை. ஆனால் வீட்டை விற்க முயற்சித்த வியாபாரிக்கு ஏமாற்றம் ஏற்பட்டது அவன் எதிர்பார்த்தவிலைக்கு வீடு விற்பனையாகவில்லை. இவ்வாறு பலவிதமான சோதனைகளுக்கு ஆழான வியாபாரியின் வீடுதேடி ஒரு நாள் கொச்சுண்ணியே வந்து விட்டான். வியாபாரியே பயப்படாதே உன்னை நான் தொந்தரவு செய்யமாட்டேன். உன்னுடைய பணத்தை திருப்பிக்கொடுக்கவே நான் வந்துள்ளேன் உன்னிடமிருந்து பணத்தை கைப்பற்றிய அன்றே நீ ஓர் ஏழை வியாபாரிதான் என்று தெரிந்துவிட்டது . அன்று எனக்கு பணம் தேவையாயிருந்ததால் உன்னிடம் இருந்து பலவந்தமாக பணத்தை எடுத்துக்கொண்டேன். அதற்காக வருந்துகின்றேன். எடுத்துக்கொள் உன் பணத்தை "என்று சொல்லிவிட்டு கொச்சுண்ணி சென்றுவிட்டான்.

அந்த பணப்பையில் அன்று கொச்சுண்ணி எடுத்துகொண்டதை காட்டிலும் நான்கு மடங்கு அதிக பணம் இருந்தது கொச்சுண்ணியின் இரக்ககுனத்தை அறிந்து உணர்ச்சிவசப்பட்ட வியாபாரி" கடவுளே கொச்சுண்ணியின் நல்ல மனதிற்கு அவனை நீண்டகாலம் வாழசெய்யுங்கள்" என்று பிராத்தனை செய்தான்.

### சென்றமாத 5ம் ஆண்டு புலமைப்பரிட்சை வினாக்களுக்குரிய விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 03 | 11. | 2 | 21. | 3 |
| 2. | 01 | 12. | 3 | 22. | 2 |
| 3. | 03 | 13. | 3 | 23. | 3 |
| 4. | 01 | 14. | 2 | 24. | 1 |
| 5. | 02 | 15. | 4 | 25. | 4 |
| 6. | 01 | 16. | 3 | 26. | 1 |
| 7. | 04 | 17. | 1 | 27. | 2 |
| 8. | 2 | 18. | 2 | 28. | 3 |
| 9. | 4 | 19. | 4 | 29. | 1 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 2 |

**இந்த மாதம் 5ம் ஆண்டு புலமைபரிசில் மாணவர்களுக்கான வினாவிடைகள் சேர்த்துக்கொள்ளப்படுவதில் சிறிய தடங்கல் ஏற்பட்டதால் இணைத்துக்கொள்ளப்படவில்லை எதிர்வரும் மாதத்திலிருந்து சிறப்பாக வழங்குவோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பொது சுகாதார பரிசோதகர்கள் அலுவலக முகவரி

| பொது சுகாதார பரிசோதகர் பிரிவு | பொது சுகாதார பரிசோதகர் அலுவலக முகவரி |
|---|---|
| நொச்சிமோட்டை | மகாறம்பைக்குளம் தாய் சேய் சிகிச்சை நிலையம், மகாறம்பைக்குளம். |
| ஓமந்தை | பிரதேசசபை ஓமந்தை, ஓமந்தை |
| நெளுக்குளம்<br>கூமாங்குளம் | நெளுக்குளம் கலைமகள் பாடசாலை அருகாமை தாய் சேய் சிகிச்சை நிலையம் நெளுக்குளம். |
| பூவரசங்குளம் | பூவரசங்குளம் வைத்தியசாலை, பூவரசங்குளம் |
| சிதம்பரபுரம் | சமணங்குளம் தாய் சேய் சிகிச்சை நிலையம், சமளங்குளம். |
| அலுவலக நேரம்: மாலை 2 மணி தொடக்கம் 3 மணி வரை | |

## குழந்தைகளுக்கான தடுப்பூசிகள்

| தடுப்பூசி | கொடுக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|
| காசநோய் தடுப்பூசி (BCG) | குழந்தை பிறந்து 24 மணித்தியாலங்களின் உள் |
| ஐந்து கூட்டு ஊசி (Penta), போலியோ சொட்டு மருந்து | 2 மாதம் முடிந்தவுடன் |
| ஐந்து கூட்டு ஊசி (Penta), போலியோ சொட்டு மருந்து | 4 மாதம் முடிந்தவுடன் |
| ஐந்து கூட்டு ஊசி (Penta), போலியோ சொட்டு மருந்து | 6 மாதம் முடிந்தவுடன் |
| ஜப்பான் மூளைக்காய்ச்சல் தடுப்பூசி (JE) போலியோ சொட்டு மருந்து | 9 மாதம் முடிந்தவுடன் |
| ருபெல்லா, சின்னமுத்து மற்றும் கூகைக்கட்டுத் தடுப்பூசி (MMR), போலியோ சொட்டு மருந்து | 1 வயது பூர்த்தியடைந்ததும் |
| முக்கூட்டு ஊசி, போலியோ சொட்டு மருந்து (DPT) | 18 மாதங்கள் பூர்த்தி அடைந்ததும் |
| MMR, போலியோ சொட்டு மருந்து | 3 வயது பூர்த்தி அடைந்ததும் |
| இருகூட்டு ஊசி (DT), போலியோ சொட்டு மருந்து | ஐந்து வயது பூர்த்தி அடைந்ததும் |
| aTd | 10 - 14 வயதுடையவர்கள் (பொதுவாக ஆண்டு 7 மாணவர்களிற்கு பாடசாலையில் வழங்கப்படும்) |

மேற்குறிப்பிடப்பட்ட ஊசிகள் உரிய காலத்தில் குழந்தைகளிற்கு கொடுக்கப் பட வேண்டும். இத்தடுப்பு மருந்துகளை உங்கள் பகுதிக்குரிய மருத்துவமாதுக்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். தடுப்பூசிகள் விபரம் குழந்தைகளின் வளர்ச்சிப் பதிவேடு (CHDR) இல் குறித்துக் கொள்ளப்படும். இவ்வழர்ச்சிப் பதிவேடுகளை பாதுகாப்பது இன்றியமையாததாகும்.



தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி-வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE

No:26, Station Road, (Appalo Hospital Upstair) Vavuniya.

# குறுங்கால விடுமுறைக் கற்கைகள்

- மாணவர்களுக்கான அறிவிப்பாளர் கற்கை (Mass media)
- Kids Computer Whiz
- e-Genius Computing
- Brain Gym—சிறுவர்களுக்கான சர்வதேச தரக்கற்கை – UK
- மாணவர் கற்றல் திறன் விருத்தி கற்கைகள்

**சர்வதேச தரக் கற்கை நெறிகள்**

IELTS | KET | PET | A1 | B1

டொச் | பிரெஞ்

**தொழில்சார் கற்கைகள்**

**a.a.t (3 மட்டங்கள்) ஆங்கில/தமிழ்மொழிமூலம்**

**a.a.t கற்கைக்கென தனித்துவம் பெற்ற கல்லூரி**

**எங்கும் கிடையாத அதி கூடிய கட்டணக்கழிவு**

a.a.t கற்கைகள் மாணவர் நலம் சார்ந்த நிபுணத்துவ விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது

**வங்கியாளர் கற்கைகள் CBF/DBF**

**Mobile Phone Repairing Technician Course**


**ISS-CSS-Greenwich World Class Computing**

***SUN BRITISH BUSINES MANAGEMENT COLLEGE***

No: 26,Station Rd, Vavuniya. Tel:0245672929 0773466949





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Printed and Published by Vijay Printing Centre No. 172B, Mill Road, Vavuniya, in August, 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org